விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii


பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2036 மார்கழி 15 வெள்ளிக்கிழமை (30.12.2005) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 11

ராம்கோ
RAMCO CEMENT
சீமெந்து

## தாக்குதல் அனைத்தையும் உடனடியாக நிறுத்துங்கள்

### யாழ். ஆயர் அவசர வேண்டுகோள்



(யாழ்ப்பாணம்)

சகல தாக்குதல்களையும் உடனடியாக நிறுத்துங்கள். எவ்விதத்திலும் பொதுமக்கள் தாக்குதலுக்கு இலக்காகக்கூடிய செயல்களைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்.

2002 ஆம் ஆண்டிலே ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் சகல சரத்துக்களையும் நிறைவு செய்வதற்கான நடவடிக்கைகளை மேலும் காலம் தாழ்த்தாது ஆரம்பியுங்கள்.

தமிழ்மக்களின் நியாயமான அரசியல் கோரிக்கைகளை உள்வாங்கக்கூடிய பரந்த நோக்கிலான ஆலோசனைகளை முன்வையுங்கள் என அனைத்துத் தலைவர்களுக்கும், மக்களுக்கும் யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளார். அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

அதிகரித்துவரும் கொலைகளும், சமூகப் பெரியார்கள் உட்பட பொதுமக்கள் (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஆயர்கள் இன்று கிளிநொச்சிக்கு

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை இலங்கையின் மறைமாவட்ட ஆயர்கள் குழுவினர் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர். இச்சந்திப்பு கிளிநொச்சியிலுள்ள விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தில் இன்று காலை 11 மணியளவில் இடம்பெறவுள்ளது.

தரைமார்க்கமாக கிளிநொச்சி செல்லும் இக்குழுவில் யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம், மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப், கண்டி ஆயர் வியானி பெர்னாண்டோ, கொழும்பு ஆயர் டுலிப் டி சிக்கெர, குருநாகல் ஆயர் குமார இலங்கசிங்க ஆகியோருடன்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# வன்முறைகள் தொடருமானால் யுத்தம் வெகுதொலைவிலில்லை

## மன்னாரில் கைக்குண்டு வீச்சு

(மன்னார்)

மன்னாரில் படையினர் மீது நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு 9.30 மணியளவில் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. மன்னார் விளையாட்டு மைதானப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இராணுவக் காவலரண் மீது இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதில் படையினர் எவரும் காயமடையவில்லையென இராணுவத் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனையடுத்து இராணுவத்தினர் மூர் வீதி, சின்னக்கடை, உப்புக்குளம் ஆகிய பகுதிகளில் பாரிய தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக்குழு எச்சரிக்கை

(கொழும்பு)

வடக்குக் கிழக்கில் இடம்பெறும் வன்முறைச் சம்பவங்கள் இனியும் தொடருமானால் பாரிய யுத்தம் ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்கள் தொலைவில் இல்லையென போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஹக்ரூப் ஹொக்லண்ட் எச்சரித்துள்ளார். எனவே போர் அச்சத்தை தவிர்ப்பதற்கு அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் ஒன்றிணையவேண்டும். அதன் பின்னர் இணைந்து வடக்குக் கிழக்கில் இடம்பெற்றுவரும் வன்முறைகளைக் கட்டுப்படுத்தவேண்டும் எனவும் ஹொக்லண்ட் கேட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், வன்முறைகளைக் கட்டுப்படுத்துவதன் மூலம் அரசுக்கும் விடுதலைப் (12 ஆம் பக்கம் பார்க்க)

## இணுவிலில் நேற்றிரவு இராணுவம் மீது சூடு

### சிப்பாய் படுகாயம்

(இணுவில்)

இணுவில் ஆஸ்பத்திரிக்குள் நின்ற இராணுவத்தினர் மீது நேற்றிரவு 7 மணியளவில் இனந்தெரியாதோர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இராணுவச் சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்தார்.

காயமடைந்தவர் உடனடியாக பலாலி வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இச்சம்பவத்தை அடுத்து இராணுவத்தினர் பதில் தாக்குதல் மேற்கொண்டனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நித்திரையிலிருந்த இளைஞன் நள்ளிரவில் சுட்டுக்கொலை

### வரணி இயற்றாளையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

வரணியில் நேற்று முன்தினம் நள்ளிரவு இளைஞர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். கொடிகாமம் பொதுச் சந்தையில் பல சரக்குக் கடை ஒன்றில் பணிபுரியும், வரணி தாவளை இயற்றாளையைச் சேர்ந்த தம்பிராசா அருள் அஜந்தன் (வயது 17) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் தமது வீட்டுக்குள் நுழைந்த ஆறுபேர் கொண்ட குழுவே தனது மகனைச் சுட்டுக்கொன்றதாக இறந்தவரின் தந்தை சாட்சியமளித்துள்ளார்.

வீட்டுக்குள் அவர்கள் நுழைந்தபோது தனது மகன் நித்திரையில் இருந்ததாகவும், மகன் நித்திரையில் இருந்தபோதே அவரின் நெற்றியிலும் உடம்புப் பகுதியிலும் இனந்தெரியாதோர் சுட்டதாக அவர் தெரிவித்தார்.

மகனைக் கட்டிப்பிடித்து கதறியழுதபோது அவர்கள் சுடுவதை நிறுத்திவிட்டு நடந்தே சென்றதாகவும் தந்தையார் தெரிவித்தார்.

வீட்டின் கஷ்டநிலை காரணமாக கடந்த (12 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகள் நிலைகள் மீது கஞ்சிக்குடிச்சாறில் தாக்குதல்!

### சேதம் எதுவும் இல்லையெனத் தெரிவிப்பு

(அம்பாறை)

அம்பாறை கஞ்சிக்குடிச்சாறில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியை நோக்கி இராணுவத்தினரால் தாக்குதல் நடாத்தப்பட்டதாக விடுதலைப் புலிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

நேற்றுக்காலை தமது பகுதிக்குள் சுற்றுக் காவல் பணியில் ஈடுபட்டிருந்த விடுதலைப் புலிகளின் போராளிகள் மீது பவள் கவச வாகனம் சகிதம் குவிக்கப்பட்ட இராணுவத்தினர் இத்தாக்குதலை மேற்கொண்டதாக தெரிவிக்கப்பட்டது.

இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலின் போது எவ்வித சேதமும் ஏற்படவில்லையென செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை தம்மைச் சீண்டி மீண்டும் போரை ஏற்படுத்தும் வகையில் இராணுவத்தினரால் இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இராணுவத்தின் மீது போராளிகள் எந்த வித பதில் தாக்குதல்களும் மேற்கொள்ளவில்லையென புலிகள் தெரிவித்துள்ளனர்.

(ச)

EXPOAIR

your friend in the skies...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்:

021 - 222 3891, 222 6297, 077 - 2349999,

011 - 2372952/3, 011 - 2360290/1

e.mail:- jaffna @ expoavi.com, reservations @ expoavi.com.



எக்ஸ்போ எயார்

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

# தனித்துவம் மிக்க தமிழ்வேதத்தின் சிறப்புகள்

**'வித்'** தின் அடிப்படையாக வேதம் தோற்றியது என்பர். வட



மொழியில் வேதத்தைக் கேட்டுச் சந்ததி சந்ததியாகப் பழக்கப் பெற்று இரத்தத்தில் ஊறி உயிரோடு ஒன்றாகக் கலந்து போனதால் வேதம் என்றால் பிராகிருத மொழியில் உள்ளது எனச் செந்தமிழர் உணர்வில் ஊசலாடும். ஆனால் வடமொழி வேதத்திற்குாிய அத்தனை மகிமையும் மகத்துவமும் புனிதமும் தென் தமிழ் வேதமாகிய தேவார திருவாசகத திருமுறை களுக்கு உண்டு. இன்னும் ஒரு படி தமிழ் வேதம் உயர்ந்தது என்பதற்குத் திருமறைக்காட்டில் நிகழ்ந்த சம்பவம் தக்க சான்று.

எண்ணில்லாத கோடி வேதங்கள் ஒன்றுகூடி மிடைந்து செய்த பணியை, தாம் மேற்கொள்ளும் திருமேனி நாத மேயாகக் கொண்ட கங்கையைப் பொதிந்த சடா முடியினை உடைய சிவபிரானது திருப்பாதங்களைப் பேணும் எம் பெருமக்கள் இருவருடைய பெருமையை ஆர் அளக்க வல்லார் என்று அருள்பாடல் ஆக்குவார் அருண்மொழித்தேவர்.

ஆரியவேதம் மந்திர வடிவமாக இறைவனை வழிபடுமாறு போல தமிழர் வேதமும் மந்திர வடிவமாகச் சிவபெருமானைச் சேவிக்கும் என்ற உண்மையினை,

"திருமுறைச் செய்யுள் முற்றவ முதன்மையான் ஐந்தவித்து மனந் தூயராய் முக்குணங்களு

## வெள்ளிநற்சிந்தனை

முற்றக் கடந்து துரிய முழு முதல்வனான பரமசிவன் திருவருள் ஞானம் பெற்ற உண்மை நாயன்மார் மந்திர மறைமொழியால் நிற்றலின் தமிழ் வேதமெனவும், திருமுறையெனவும் அங்ஙனம் வேறாகக் கொண்டு அத்தியயன ஒத்ததாகப் பெரியோராற் போற்றப்பட்டனவென்பது" என்று திராவிடப் பிரகாசிகை பேராதரித்து எடுத்துப்பேசும்.

மேலும் தமிழ் வேதம் பிறிது ஒன்றைப் பின்பற்றாமலும் சாராமலும் ஆரிய வேதம் தோற்றியது போலத் தமிழ் வேதம் இயல்பாக எழுந்தது என்பதனைப் பின்வருமாறு விரித்துரைக்கும்.

"பரமான்மாவாகிய பரமசிவத்தினுடைய பராசக்தி குடிலையை நோக்கிய வழிக் குடிலையினின்று நாதவடிவாயும் அதன்பின் விந்து வடிவாயும் அதனபின் அக்கர வடிவாயும் வேதாகமங்கள் தோன்றியவாறு போல பாசமனைத்தினும் நீங்கி விளங்கிய ஆளுடைய பிளளையார் முதலிய சமயாசாரியா தூயவறிவின் மேம்பட்டு விளங்கிய சிவசக்தி அத்துவித இயைபான் மற்றதனைப் பிரேரக்க லுற்றழி ஆண்டுநின்று நாதவடிவாயும் விந்து வடிவாயும் அதன்பின் அககர வடிவாயும் தோன்றின. கட வுண் மொழியாகலின், தேவாரம், திருவாசகம், திருக்கோவையென னும் அருளோத்துக்களைத 'தமிழ வேதம்' என்றுந் 'திருமுறைகள்' என்றுந், 'திருவருட்பாக்கள்' என்றும் அவ்வாறு ஆன்றோர் வேறு கொண்டு போற்றி வழங்குவோராயினரென்று உணர்ந்து கொள்க' என்று திராவிடப் பிரகாசிகை பொய கலவாத மெய்யைப் பெய்யும் மேலும்,

'தேவாரம் வேதசாரம்' என்று தெளிவுபடுத்த வந்த ஸ்ரீகாசிவாசி செந்திநாதையர் அது அங்ஙன மன்று; தேவார திருவாசகம் 'தமிழ் வேதம்' என்று உய்த்து உணரவைக்குமாறு காண்க.

**சிவ சண்முகவடிவேல்**

'தேவாரம் வேதசாரம்' என்றமையால் வேதத்தின் மொழி பெயர்புத்தான் தேவாரமோ எனின், அங்ஙனமன்று; பின் அதன் கருத்து என்னையெனில் வேதம் என்று மேலே நிரூபிக்கப்பட்ட வேதம், வேதசிரசு, ஆகமம், ஆகமாந்தம், இதிகாச புராணம் என்பவைகளிலே இலைமறைகாய்கள் போன்றும் மணன் மலையிற் பொற பொடிகள் போன்றும் அங்கங்கே இலங்கும் சிவாகமப் பரமான்மாக்களின் ஐக்கியத்தினால் நேர்ந்த ஆனந்த நிலைகளையும், சிவபெருமானது அளவிறந்த குணாதிசயங்களையும், இலக்கணங்களையும் எந்தத் தேவாரம் முடிக்க இயலாதவனாய் அச்சிவபிரான் ஒருவராலே முடிக்கப்பட்டன. வாயுமுள்ளர் அளவிறந்த வீரச் செய்கைகளையும் பிறவற்றையும் குணோபசங் காரக் கிரமத்தினால ஆதாரம் கொண்டியைத்துப் புகழ்ந்து தேவாரம துதிப்பதனால் அது வேத சாரம் எனப்படும்"

சுருங்கக் கூறின் ஆரியவேதக் கருத்துக்கள் தமிழ் வேதத்தில் காணப்படுவதாலும், தமிழ்வேத காலத்திற்கு முற்பட்டது ஆரிய வேதம் ஆதலாலும் தேவாரம் வேத சாரம் என்பது எங்ஙனம் பொருந்தும்?

நீர் என்னும் ஒரு பொருளை தமிழல் நீர் என்றும், ஆங்கிலத்தில 'வாட்டார்' என்றும், ஆரியத்தில் 'உதகம்'என்றும் சிங்களத்தில் 'வத் துரு' என்றும் வழங்குகும வழக்கு ஒரு மொழியைப் பார்த்து மொழிந்தது எனலாமா?

அதேபோல ஆரியவேதத்தில் காணப்படும் அரும்பொருள் தமிழ் வேதத்தில் காணப்படுவதால் சார்பு என்பது எங்ஙனம் ஒப்புடைத்து. இன்னும் தமிழ் வேதத்தில் பதி தடத்த சொருபக் கருத்துக்கள் போலச் சிவாகமக் கருத்துகள் சரியை கிரியை யோக ஞானம் மிக நுட்பமாக நுணுக்கமாக நுவலப்படும் நூதனம் நோக்கற் பாலது.

பெரியபுராணத்தில் அருண்மொழித்தேவர் தமிழ் வேதத்தை எவ்வளவு நுட்பமாக நுண்மாண் நுழை புலத்தில் நுகர வைக்கும் திறன் இது.

"எழுது மாமறை யாம்பதி கத் திசை முழுதும் பாடி முதல்வரைப் போற்றி"

'எல்லையிலா மறை முதன்மையுடனெடுத்து வெழுதுமறை மல்ல னெடுந்தமிழால்-

'மிக்கசொற் றமிழினால் வேதமும் பாடினார்.

....திருத் தோணிமிசை மேவினார்கள் தங்க டிருமுன்பு தாழ்ந்தெழுந்து தமிழ்வேதம் பாடினார் தாளம் பெற்றார்'

தமிழ்வேதம் தனியானது. தனித்துவமானது. திருக்கோவில்களில அனுதினமும் ஓதும் நியதி நிலைக்க வேண்டும். பண்ணாரமாகத் தமிழ் வேதம் ஓதும்போது ஆசாரம் பூனாரமாகப் பொலிக. □

## வீதியோரத்தில் விலங்குக் கழிவுகள்

கரவெட்டி ஞானசாரியார் வீதியில் பாடசாலைக்கு வடக்கு புறமாக இறைச்சிக்காக வெட்டப்படும் விலங்குக் கழிவுகள் வீதியோரத்தில் கொட்டப்படுவதால் கடும் துர்நாற்றம் வீசுகின்றது.

இது சம்பந்தமாக பல தடவை பிரதேச சபையினருக்கு முறையிட்டும பயன் எதுவும் கிடைக்கவில்லை என அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தற்போது மழைநீர் தேங்கியிருப்பதால் அவற்றுள் கொட்டப்பட்ட விலங்குக் கழிவுகள் நீருடன் கலந்துள்ளதால் சுற்றுப்புற சூழலிலுள்ள குடிநீர் கிணறுகளும் சுகாதார சீர்கேட்டுக்கு உட்படுவதாகவும் இதுவிடயமாக பிரதேச சபையினரும், சுகாதாரப் பகுதியினரும் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(த-101)

## மீனவரை விடுவிக்க விசேட திட்டம்

(கொழும்பு)

அரேபியக் கடற்பரப்பில் மீன் பிடிக்கச் செல்லும் இலங்கை மீனவர்கள் கைதுசெய்யப்படும் போது அவர்களை உடனடியாக விடுதலை செய்ய விசேட திட்டம ஒன்றை செயற்படுத்த மீன்பிடித் துறை அமைச்சு கவனஞ் செலுத்தி வருகின்றது.இது தொடர்பாக இந்திய அர சாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாக மீன்பிடித்துறை அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்தார்.

பேச்சுவார்த்தையின் போது காணப்பட்ட இணக்கப்பாட்டிற்கு ஏற்ப இரணடு நாடுகளினதும் உயா அதிகாரிகளைக் கொண்ட இரண்டு குழுக்கள் நியமிக்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-7)

## இராசிபலன்

**30.12.2005**
**(மார்கழி 15, வெள்ளிக்கிழமை)**
**சதுர்த்தி முற்பகல் 11.19 மணிவரை**
**கேட்டை காலை 6.53 மணிவரை**
**மூலம் பின்னிரவு 5.59மணிவரை**
**இராகுகாலம் 10.59-12.29 மணிவரை**
**சுபநேரம் 6.29-7.59 மணிவரை**
**அமாவாசை விரதம்**

| | |
|---|---|
| மேடம் | புதிய திட்டமிடல், சரீரப்பிரயாசை, பிரயாணம், பித்த ரோகம். |
| இடபம் | எதிர்பாராத அச்சம், காரிய தடங்கல், உடல நலக் குறைவு, போசனசுகம். |
| மிதுனம் | குடுமபநன்மை, எடுத்த காரியம் கைகூடும், தெய்வ தரிசனம், பிரயாண நன்மை. |
| கடகம் | உடல்நலம், பெரியோர் உதவி, சுப நிகழ்வு, போசன சுகம். |
| சிங்கம் | அமைதிக்குறைவு, தொழில் மந்தநிலை, உறவினர் சந்திப்பு, பணவிரயம். |
| கன்னி | புதிய திருப்பம், சுபசெலவு, காரியதாமதம், சிந்தனை மிகுதி. |
| துலாம் | எடுத்த காரியம் கைகூடும், பெருமையடைதல், உறவினர் சந்திப்பு, தெய்வ தரிசனம். |
| விருச்சிகம் | பணவிரயம், காரிய தடங்கல், கோபப்படுதல், போசனசுகக்குறைவு. |
| தனுசு | நண்பர்கள் சந்திப்பு, புதியதிருப்பம், நல்ல செய்தி, உஷ்ண வியாதி. |
| மகரம் | பிரயாணம் மனஸ்தாபம், உறவினர் வருகை, சுபசெலவு. |
| கும்பம் | எடுத்த காரியம் கைகூடும், விருந்துபசாரம, பெரியோர் உதவி, தனவருவாய் |
| மீனம் | அதிகபிரயாசை, நிலைமாற்றம், காரிய அனுகூலம், தெய்வசிந்தை. |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**
**- வளவன்**

## சேது சமுத்திரத்திட்டம் தொடர்பில் மீள ஆலோசிக்கவேண்டும்!

(கொழும்பு)

சேது சமுத்திரத் திட்டம் தொடர்பில் இந்திய அரசாங்கம் மீளவும் ஆலோசனை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

சென்னையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆழிப்பேரலை தொடர்பான நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய தமிழ்நாட்டின் புவி ஆராய்ச்சி நிறுவனத் தலைவர் சுவாமிநாதன் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

ஆழிப்பேரலையின் காரணமாக அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள் பிரதான நிலப்பரப்பை நோக்கி 4 மீற்றர்கள் அளவில் நெருங்கியுள்ளன.

எனவே, இந்த நிலையில் சேது சமுத்திரத்திட்டம குறித்து இந்திய அரசாங்கம் மீளவும் ஆராய வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(த-7)

## பராஜசிங்கத்தின் படுகொலை சமாதானத்துக்கு விழுந்த வேட்டு

'தமிழ் இனத்தின் சிறந்த வழகாட்டியாக, தமிழ் பேசும் இனம் விடுதலைபெற வேண்டும் என்பதில் வேட்கை கொண்டவராக தமிழ்த் தேசிய உணர்வுக்கு வலுச்சேர்த்த பெருமகனாக, சிங்கள மக்களுடன் தமிழ்பேசும் மக்களை இணைந்து வாழ முடியாத யதார்த்தத்தை உணர்ந்தவராக, அரச பயங்கரவாதத்தை கண்டித்து மனித உரிமைகள் பேணப்படவேண்டும் என்பதில் உறுதியுடன் உழைத்த உததமராக தாயக நிலப்பரப்பிலும், புலம்பெயர்ந்து வாழும் தமிழ்பேசும் இனத்தின் உரிமைக் குரலை உலகுக்கு உணர்த்தும் உயரிய இலட்சியம கொண்டவராக, ஆற்றலும், அறிவும், நேர்மைத் திறனும், அரசியல் இராஜதந்திரமும் மிக்கவராக எப்படி உயர்ந்த மனிதப் பண்புடன் வாழவேண் டும் என வாழ்நது காட்டிய உயர் பண்பாளனான ஜோசப் பரராஜசிங்கத்தை பண்பற்ற கொடூரர் கொலை செய்துவிட்டனர்.

ஒடுக்கப்பட்ட உரிமைகள் மறுக்கப்பட்டவர்களுக்காக உழைத்த உத்தமபுரிசர் ஜேசுநாதர் பிறந்த வேளையில் அவரின் வாழிபாட்டு இடத்தில் வைத்து அவரை கொலைசெய்ததோடு, அவரின் மனைவியையும், பொதுமக்களையும் கொலை செய்ய முயற்சித்த இந்நிகழ்வை தமிழ்பேசும் இனம் வன்மையாகக் கண்டிப்பதுடன் இக்கொலை சமாதான சூழலுக்கு விழுந்த வேட்டு. இதுபோன்ற செயல்கள் தொடருமானால் அரசே போருக்கு தமிழ் பேசும் மக்களைத் தூண்டுகிறது என்பதே பொருளாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(து)

## யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகத்தின் 4ஆவது ஆண்டு நிறைவும் மத்தியின் தினமும்

கடந்த 15ஆம் திகதி விழயாழக்கிழமை நடைபெற்ற 30.12.2001 அன்று யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவர்களால் உருவாக்கப்பட்ட யாழ்.சென்றல் விளையாட்டு கழகத்தின் வருடாந்த பொதுக்கூட்டத்தில் கழகத்தின் நான்காவது ஆண்டு நிறைவினையும், மத்தியின் தினத்தையும் இன்று வெள்ளிக்கிழமை கொண்டாடுவது எனவும் கழகத் தலைவர் என்.செல்வநாயகம் கழக காப்பாளர் கே.இராசதுரை ஆகியோர் அமரர்களாகியமையால் இந் நிகழ்வினை அமைதியான முறையில் கொண்டாடுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இவ் இரு நிகழ்வினதும் ஞாபகார்த்தமாக அவுஸ்திரேலியாவில ஜனவரி மாதம் நடைபெற இருக்கும் அவுஸ்திஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, இலங்கை ஆகிய 3 நாடுகளுக்கிடையான முக் கோண VB தொடர் போட்டிக்கான அட்டவணை ஒன்றின்னை வெளியிடுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

பினவருவோர் யாழ்.சென்றல் விளையாட்டு கழகத்தின் அடுத்த ஆண்டு நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்-ஏ. சி. ஜோர்ஜ், உபதலைவர்கள் கே.ஜெகதாஸ், கி.றஜீவி, செயலாளர்-சொ.சிலபாலன், உப செயலாளர் சொ.விமலதாசன், பொருளாளர் -உ.தவபாலன், நிர்வாகசபை உறுப்பினர்கள்-ரி.ரஜேநதிரா, ஆர்.றமணபிரகாஸ், எஸ்.ஈழமாறன்.

(து)


## வேலை வாய்ப்பு-2005

1.பிரதேச செய்தியாளர்கள்(ஆண்கள்)
2.அலுவலகச் செய்தியாளர்கள்(இருபாலாரும்)
3.விளையாட்டுத்துறைச் செய்தியாளர்கள்(இருபாலாரும்)
4.உதவி ஆசிரியர்கள் (இருபாலாரும்)

கல்வித்தகைமை:-க.பொ.த உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்தி
குறிப்பு:-பத்திரிகைத்துறை அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

5.பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் (இருபாலாரும்)
6.சிற்றூழியர்கள்(இருபாலாரும்)
7.ஒவ்செற் பயிலுநர் (ஆண்கள் மட்டும்)

கல்வித்தகைமை:-க.பொ.த(சாதாரணம்)

விண்ணப்பிக்கும் பதவியுடன் சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பங்களை,

நிர்வாக உத்தியோகத்தர், வலம்புரி,
இல.3, 2ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 31.12.2005க்குப் பிந்தாமல் அனுப்பி வைக்கவும்.

நிர்வாக உத்தியோகத்தர்.

# ஈழத்தமிழர் சிக்கலை இந்திய அரசால் தீர்க்கமுடியுமா?

## இந்தியாவின் நிலைப்பாடு பற்றிய ஓர் ஆய்வு

இலங்கையில் எழுந்துள்ள இனச் சிக்கலைத் தீர்க்க இந்தியாவின் துணையை நாடி குடியரசுத் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவிற்குப் பயணம் என்ற பொருள்பட அனைத்து செய்தி இதழ்களிலும் செய்திகள் வெளிவந்த வண்ணம்




இருக்கின்றன.

மேலெழுந்த நிலையில் இச் செய்தி வரவேற்கத்தக்கதாகத்தான் அமைகிறது. இந்தியா பக்கத்து நாடு என்பதையும் தென் ஆசியாவின் பலம் மிக்க ஒரு வல்லரசு என்பதையும் மறுப்பதற்கில்லை. இந்த அடிப்படையில் இந்தியாவைப் புறக்கணித்து, நல்நோக்கத்தோடு செயறபட்டாலும் இந்தியா உதவி செய்ய மறுப்பின் விரும்பிய பயனைப் பெறமுடியாது என்பதையும் மறுப்பதற்கில்லை.

### இந்திரா இயம்பியவை

1987இல் இலங்கை இந்திய ஒப்பந்தம் உருவாகும் வரையில் ஈழத்தமிழர் பிரச்சினையில் இந்தியா காட்டிய அக்கறை எம் நெஞ்சை நெகிழ வைக்கும் நிகழ்ச்சியாகும். குறிப்பாக ஜே.ஆர் இங்கு ஆட்சி



யில் இருந்த காலத்தில் இந்தியாவின் தலைமை அமைச்சராக இருந்த இந்திரா காந்தி ஈழத்தமிழ் மக்கள் மீது காட்டிய அக்கறையை- இரக்கத்தை நாம் எளிதில் மறக்கமுடியாது.

இந்திரா காந்தியுடன் ஈழத்தமிழ்த் தலைவர்கள் பலர் நெஞ்சம் கலந்து உரையாடி எம் நிலைமையை விளக்கிய நேரங்களில் அவர் எம் பிரச்சினையில் காட்டிய அக்கறை வரலாற்றில் இடம்பெறும் நிகழ்ச்சியாகும். ஜே.ஆர். ஜெயவர்த்தனா இந்தியாவின் எதிரி என்று இந்திரா காந்தியிடம் அவரைப் பற்றிக் குறிப்பிட்ட போது புன்முறுவல் பூத்த இந்திரா காந்தி "அவர் இந்தியாவின் எதிரி மட்டுமல்ல இந்திரா வின் எதிரியும்தான்" என்று கூறினார். மேலும அவர் "உங்கள் பிரச்சீனையை நான் நன்கு அறிவேன். நீங்கள் எதிர்நோக்கும் பல பிரச்சினைகளுள் உங்கள் மண்ணில் இருந்து உங்களை வேரோடு சாய்க்கின்ற முறையில், அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த சிங்கள அரசுகளின் ஆதரவுடன் நடைபெறும் சிங்களக் குடியேற்றங்களால் ஏற்படுகின்ற ஆபத்துக்களை நான் நன்கு அறிவேன்" என்றும் குறிப்பிட்டார்.

### நரசிம்மராவ் நவின்றவை

நரசிம்மராவுடன் ஈழப்பிரச்சினை குறித்து உரையாடியபோது அவர் பல சுவையான செய்திகளைப் பரிமாறினார். அவற்றுள் இன்றைய சூழ்நிலையில் மிகக் குறிப்பிடத்தக்கது அவர் கூறிய பின்வரும் செய்தியாகும். "நாங்கள் மகாத்மா காந்தியைப் பெரிதாகப் போற்றுகிறோம். ஆனால் இந்திய விடுதலைக்கு மகாத்மா காந்தி போன்று, அவரையும் மிஞ்சுகின்ற அளவிற்கு இந்திய



விடுதலைக்காக சுபாஸ் சந்திரபோசும், பகவத் சிங்கும், கப்பலோட்டிய தமிழர் வஉசியும் இந்திய விடுதலைக்கு ஆற்றிய பங்களிப்பு பெரிது- மறக்க முடியாதது என்றார். அதுபோன்று இனவிடுதலைக்காக உங்கள் போராளிகள் ஆயுதம் தாங்குவதை நான் குற்றமென்று கூறவில்லை. அது தவிர்க்க முடியாதது என்று கூறி அவர் பூத்த புன்முறுவலை என்றும் மறப்பதற்கில்லை... ஆனால் இதே நரசிம்மராவ் இந்தியத் தலைமை அமைச்சராக இருந்தபோது தான் நடுக்கடலில் அமைதிகாக்கும் செய்தியுடன் இலங்கை நோக்கி வருகை தந்த கிட்டுவையும் அவர் தோழர்களையும் நடுக்கடலில் தடுத்து நிறுத்தி, தற்கொலை செய்ய வைத்த கொடூர நிகழ்ச்சியை நாம் எளிதில் மறப்பதற்கில்லை. இந்திய எல்லையிலோ இலஙகை எல்லையிலோ இல்லாத ஒரு நடுப்பகுதியிற்றான் கிட்டுவின் கப்பல நின்றது. ஆகவே இந்தியா அவர்களைப் பிடிக்க முனைந்ததும் இதனால் அவர்கள தற்கொலை செய்ததும் இந்தியாவின் தவறு என்று ஆந்திரா நீதிமன்றம் பின்பு வழங்



கிய தீர்ப்பு முக்கியத்துவம் வாய்ந்தது.

### ராஜீவ் காந்தியின் முரண்பாடு

இந்திராவின் மறைவை அடுத்து அவரின் மகன் ராஜீவ் காந்தி ஆட்சி ஏற்றபோது இந்திராவின் மகன் ஈழத்தமிழரின் இன்னல துடைப்பார் என நாம் எதிர்பார்த்ததற்கு ஏற்ப வடமராட்சியில் சிங்கள இராணுவத்தின் கடும் தாக்குதல் நடைபெற்றபோது அதனைக் கண்டித்ததோடு நில்லாது எம் மக்கள் படும் துயரையும் பட்டினியையும் போக்க வானூர்தியில் உணவுப் பொட்டலம் வசியதை நன்றியுணர்வோடு நினைத்துப் பார்க்கிறோம்.

1987 ஜுலை 29 செய்யப்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தம் ஈழத்தமிழ் மக்களின் உணர்வுகளை முற்றிலும் புறக்கணித்து அவாகள் மீது திணிக்கப்பட்ட நிர்ப்பந்தமாக உருவெடுத்து காலப்போக்கில் தீப்பந்தமாகப் பரவி மிகமிக வருந்தத்தக்க நிலையில் ராஜீவ் காந்தியையும் அத்தீயினுள் அமிழ்த்தியது. இங்கு வருகைதந்த இந்தியப் படையை அமைதிப்படை என்று வர்ணிக்கப்பட்ட போதும் அது அமளிப் படையாக மாறி திலீபனின் சாவிற்கும் குமரப்பா புலேந்திரன் உட்பட 13 வேங்கைகள தறகொலை செய்வதற்கும் தமிழ்ப் பொது மக்கள் ஆயிரக்கணக்கில் உயிரிழப்பதற்



கும் உடமைகளை இழப்பதற்கும் அநாதைகள் ஆக்கப்பட்டதற்கும் காரணமாய் இருந்தது.

### ராஜபக்ஷ விரிக்கும் வலையில் சிக்குமா இந்தியா

ரணில் விக்கிரமசிங்க பேருக்காகவாவது இணைப்பாட்சி பற்றி இயம்பினார். ஆனால் மஹிந்த ராஜபக்ஷவோ இனவெறி கொண்ட ஜே.வி.பியுடனும், ஹெல உறுமயவுடனும் இணைந்து ஈழத்தமிழர் சிக்கலை இணைப்பாடசியின் அடிப்படையில் தீர்க்க முடியாது என்று மஹிந்தவின் சிந்தனையில் கூறிய அவர் தொடர்ந்தும் அதே குரலையே எழுப்புகிறார்.

தமிழன் ஒரு தேசிய இனம் என்பதையும் தமிழரின் தாய்கக் கோட்பாடடையும் ஏற்க மறுக்கிறார். தமிழரின் தன்னுரிமை நிலைநாட்டலையும் ஏற்க மறுக்கிறார். அனைத்தையும் ஒற்றையாட் சிக்குள் தான் தீாப்பேன் என அவர் ஓங்கி ஒலிக்கும் குரல் அவர் தமிழினத்தை ஒழித்துக்கட்டும் குரலாகவே விளங்குகிறது. இதையொட்டி இந்திய அரசு என்ன கூற விரும்புகிறது என்பதை அறிய விரும்புகிறோம்.

### தலைவர் தீர்ப்பே தமிழன் தீர்ப்பு

தமிழீழ விடுதலைப் புலிகள் 'தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்' என்று ஓங்கி ஒலித்தபோதும் உலகின் கருத்தினை ஈர்க்கின்ற முறையில பொருள் பெதிந்த



இணைப்பாட்சியில் விட்டுக கொடுத்து தர்வுகாண இசைவு தெரிவித்தனர். இதனை எமது பலவீனம் எனக கருதி ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு சிங்கள அரசும் எம்மை ஏமாற்ற

**மா.க.ஈழவேந்தன் பா.உ**

முனைவதால் இனிமேல் எமக்கு இணைப்பாட்சியில் நம்பிக்கை இல்லை. எமக்குத் தரப்படுவது காலம் கடந்து தரப்படுகிறது. தரப்படுவதோ மிகக் குறைவு. சிங்கள அரசு கூறுபவற்றை நாம் முற்றாக நிராகரிக்கிறோம்.

எனவே இந்தியத் துணைக்கண்டம் ஈழத்தமிழ் மக்களுக்கு உதவ விரும்பின், நாட்டிலே உண்மையான அமைதி ஏற்பட வேண்டின் ஈழத்தமிழர் தமக்கொரு நாட்டினை அமைத்துத் தன்மானத்தோடும் தறபாது காப்போடும் வாழ்வதற்கு உதவ வேண்டும். □

# இலஞ்சம் பெறுவோருக்கு எதிரான விசாரணைகள் விரிவுபடுத்தப்படும்

(கொழும்பு)

இலஞ்சம் பெறுவது தொடர்பில் மேற்கொள்ளப்படும் விசாரணைகளை விரிவுபடுத்தப்போவத்ாக இலஞ்ச மற்றும் ஊழல் மோசடிகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதற்கமைய உடனடி சுற்றிவளைப்புக்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் இதற்கென விசேடமான தேடுதல் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனைத் தவிர, ஆணைக்குழுவிற்குக் கிடைக்கும் முறைப்பாடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் சுற்றிவளைப்புக்கள் விரிவுபடுத்தப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

விசேடமாக உற்சவ காலத்தின்போது பலதுறைகளைச் சார்ந்த அரச உத்தியோகத்தர்கள் கூடுதலாக இலஞ்சம் வாங்குகின்றனர்.

இதன்மூலம் அரசாங்கத்திற்குக் கிடைக்க வேண்டிய பெருமளவு வருமானம் இழக்கப்படுகிறது. தற்போது பயிறசி பெற்ற குழுககள் சுற்றி வளைப்புக்களில் ஈடுபடுத்தப்பட்டுவருவதாகவும் இதுவரை இலஞ்சம் பெற்றுவ்ந்த பல அரச உத்தியோகத்தர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

இலஞ்சம் அல்லது ஊழல் மோசடி தொடர்பான முறைப்பாடுகளை கடிதமூலம் அல்லது தொலைபேசி ஊடாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கு அறிவிக்கமுடியும்.

தொலைபேசி ஊடாக முறைப்பாடுகளை மேற்கொள்வதற்கு தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம் 0112586841 என அறிவிக்கப்பட்டுள்ளது. (த-7)

# தேவாலயத்தில் இராணுவச் சீருடைகள்; மட்டக்களப்பில் கண்டுபிடிப்பு!

(மட்டக்களப்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம் சுட்டுக்கொல்லப்பட்ட தேவாலயத்திற்கு அருகாமையில் உள்ள புனித அந்தோனியார் தேவாலயத்தில் 2 தொகுதி இராணுவச் சீருடைகள் மறைத்துவைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்ட புனித மரியாள் தேவாலயத்துக்கு மிக அண்மையில் 100 மீற்றர் தொலைவில் இந்தத் தேவாலயம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

புனித அந்தோனியார் தேவாலயத்தின ஓய்வறையில் இரு தொகுதி இராணுவச் சீருடைகள், காலணிகள் என்பன ஒரு பையில் வைக்கப்பட்டிருந்தன. புனித அநதோனியார் தேவாலயத்தில் நேற்று முன்தினம் காலை வழிபாட்டில் கலந்துகொண்ட பொது மக்கள் இந்தச் சீருடைகளைக் கண்டுள்ளனர். இதையடுத்து மட்டக்களப்பு பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. (த)

# புத்தாண்டுத் திருப்பலி

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை புனித - மரியாள் ஆலயத்தில் புத்தாண்டுத் திருப்பலி நாளை இரவு 11.30 மணிக்கும், காலைத் திருப்பலி மறுநாள் காலை 7.00 க்கும் நடைபெறுமென பங்குத் தந்தை அருட்திரு ஜேமிஸ் அடிகள் தெரிவித்தார். (த-72)

## இன்று ஒரு தகவல்

# மருமகள்

இப்போதெல்லாம் பல இடங்களில் மாமியார் மருமகள் ஒருவரையொருவர் நன்றாகப் புரிந்து கொண்டு நல்ல விதமாகத்தான் இருக்கிறார்கள் பல இடத்தில்.அதனால் நான் இப்போது சொல்லப்போகும் கதையைக் கேட்டு விட்டு இந்தக் காலத்தில் அவ்வளவு மோசமாக யார் நடக்கப் போகிறார்கள் என்று கேட்டு யாரும் சண்டைக்கு வந்துவிடாதீர்கள்.

ஒரு சிறிய குழப்பம் ஒரு வீட்டில் அங்கு மாமியார் ஆட்சி. அவர் வைத்ததுதான் சட்டம். மகன் அம்மா சொல்வதையும் கேட்டுக்கொள்வான். மனைவி சொல்வதையும் கேட்டுக் கொள்வான். நமக்கு எதற்கு வம்பு என்ற ரகம். மருமகள் மீது குறைகண்டுபிடிப்பதில் அந்த மாமியாருக்கு ஒரு சுவாரஷ்யம். சின்னச் சின்ன விடயங்களுக்கெல்லாம் குற்றம் கண்டுபிடித்துக் கொண்டிருந்தார்.

பொதுவாக எல்லோரும் எப்படியென்றால்... ஏதாவது ஒரு காரணத்திற்காக சண்டை பிடித்துக்கொண்டிருப்பார்கள். ஆனால் இந்த மாமியார் எப்படியென்றால் ஏதாவது ஒரு காரணத்தைத் தேடிக்கொண்டிருப்பார் சண்டை பிடிப்பதற்காக. அப்படி ஒரு மனம். அந்த மருமகள் பாவம் பயந்து பயந்து ஒவ்வொரு காரியத்தையும் செய்துகொண்டிருப்பாள்.

இப்படியே பல வருடங்களாகிவிட்டது. அந்த மாமியாருக்கு மிகவும் வயதாகிவிட்டது. இருந்தாலும் அந்தப் பழைய சுபாவம் மட்டும் மாறவில்லை. அவருக்குத் திடீரென்று ஒருநாள் பக்கவாதம் வந்து ஒரு பக்கம் கையும் காலும் இழுத்துக்கொண்டது. வாய் பேசமுடியவில்லை. சத்தம் மட்டும் வரும். ஒரு பக்கக் கைகாலை அசைக்க முடியும். பேசுவதெல்லாம் சைகையால்தான். இப்படிப் பட்ட நிலையிலும் கூட மருமகள் தண்ணீரோ பாலோ இவருக்குக் கொண்டுவந்து கொடுத்தால் வேண்டுமென்றே தட்டி விட்டுவிட்டு சண்டை பிடிப்பார்.

இருந்தாலும் அந்த மருமகள் இவற்றைப் பெரிது படுத்தாமல் பொறுமை காத்தாள். ஒருநாள் வீட்டில் வைத்திருந்த பாலை பூனை குடித்துவிட்டு ஓடிவிட்டது. வயதான காலத்தில் இந்த மாமியார் பால் இல்லாமல் கஷ்டப்படுவாரே என்று நினைத்து... பக்கத்து வீட்டில் போய் கொஞ்சம் பால் வாங்கிக்கொண்டு வந்து காய்ச்சி மாமியாரின் முன்பு கொண்டுபோய் வைத்தாள். வழக்கம் போல மாமியார் பாலைத் தட்டிவிட்டார். இதை மருமகள் கவனித்துவிட்டாள்.

இவ்வளவு நாள் பொறுமையாக இருந்த அந்த மருமகளுக்கு இதைப் பார்த்ததும் அசாத்திய கோபம் வந்து விட்டது. கதவுக்குப் பக்கத்தில் வைத்திருந்த உலக்கையை எடுத்து மாமியார் தலையில் போட அது குறி தவறிக் கழுத்தில் பட அவர் கழுத்தைப் பிடித்துக்கொண்டு ஆ... ஊவென்று கத்த மருமகள் ஒன்றும் அலட்டிக் கொள்ளாமல் உலக்கையை எடுத்து மீண்டும் கதவருகே வைத்து விட்டு நடந்து போய்விட்டாள். இருந்தாலும் மனதிற்குள் இலேசாக ஒரு பயம் கணவன் வீட்டுக்கு வந்ததும் என்னவென்று சொல்லிச் சமாளிப்பது?

அன்றைக்கென்று பார்த்து நீண்டநேரம் கழித்து வீடு வந்து சேர்ந்தான் கணவன். உடனே அவனது தாய் புகார் செய்ய ஆரம்பித்தாள். பேச்சுவராதல்லவா? அதனால் ஒரு பக்கக் கையால் சைகை காட்டினாள். கதவுக்குப் பக்கத்திலிருந்த உலக்கையை நீட்டிக்காட்டி... அப்படியே அந்தக் கையை தனது கழுத்துக்குப் பின்பக்கமாக சுற்றிக் கட்டிய...நாக்கை வெளியே நீட்டி நடந்த விடயத்தைப் புரியவைக்க முயன்றார்.

இவனுக்கு ஒன்றும் புரியவில்லை. "என்ன சொல்கிறார்கள் அம்மா?" என்று மனைவியிடம் கேட்டான். மனைவி மிகவும் புத்திசாலித்தனமாக உங்கள் அம்மா கூறுவது உங்களுக்கு இன்னும் புரியவில்லையா? அவர் உங்களைப் பார்த்து ஏன் உலக்கை மாதிரி நிற்கிறாய்? சாகப்போகும் எனக்கு சங்கிலி எதற்கு? என் கழுத்தில் கிடக்கும் இந்தச் சங்கிலியைக் கழற்றி என் மருமகளின் கழுத்தில் போடு என்கிறார் என்றாள்.

"ஓ... அப்படியா விஷயம் என்று கூறி தாயின் கழுத்தில் இருந்த சங்கிலியை எடுத்து மனைவியின் கழுத்தில் போட்டுவிட்டு அம்மா உன் விருப்பப்படியே போட்டு விட்டேன். இனியாவது நிம்மதியாகப் படுத்து உறங்கு" என்று கூறிவிட்டுப் போய்விட்டான். பார்த்தீர்களா கதையை! அதனால் மாமியார்களே சைகை செய்வதற்குக் கூட இனி கவனமாக இருக்கவேண்டும்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# புலிகளுடன் பேசுவதால் மட்டுமே இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு பெற முடியும்!

## டாக்டர் ராமதாஸ்

(சென்னை)

நோர்வேயின் சமரசத்துடன் தமிழீழத் தமிழர்களால் ஏகப் பிரதிநிதிகளாக ஏற்கப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மட்டும் பேச்சுக்கள் நடத்துவதுதான் இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வாகும் என்று தமிழ் நாட்டின் பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.



இதுதொடர்பில் சென்னையில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இலங்கைத் தமிழ்ப் பிரச்சினைக்கு சுமுகத் தீர்வு ஏற்படாமல் காலம் கடத்தப்பட்டு வருவதற்கு சிங்கள அரசுகள் தான் காரணமாக இருந்துவருகின்றன.

1959இல் பண்டாரநாயக்கவுக்கும், தமிழர் தலைவர் செல்வநாயகத்திற்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தல் இருந்து இப்போது நோர்வே நாட்டின் முயற்சியில் நடைபெறும் அமைதிப் பேச்சு மற்றும் அதன் மூலம் உருவான் போர்நிறுத்த உடன்பாடு வரையில் சிங்களவர்கள் இதைத்தான் செய்து வருகிறார்கள்.

எபபோதெல்லாம் ஒப்பந்தங்கள் மீறப்பட்டு, அதனால் இலங் கையில் நெருக்கடி ஏற்படுகிறதோ, அபபோதெல்லாம் இலங்கைத் தலைவர்கள் புதுடில்லி வந்து இந்தியத் தலைவர்களைச் சந்தித்துப் பேசுகின்றனர்.

தங்கள் நிலையை இந்தியா ஆதரிக்கிறது என்பதைப் போன்ற கருத்தை உருவாக்கவே இவ்வாறு செய்கின்றனர்.

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு நோர்வேயின் முயற்சியோடு தீர்வுகாண நடத்தப்பட்ட அமைதிப் பேச்சு முறிந்து போனதற்கு முழுக் காரணமாக இருந்தவர் இப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

நோர்வே நாட்டின் சமரசம் தேவையில்லை. அந்த இடத்தை இந்தியா நிரப்ப வேண்டும் என்று அவர் கோரி வந்திருக்கிறார். இதன்மூலம் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முயற்சியை மேலும் பல ஆண்டுகளுக்கு இழுத்தடிக்க வேண்டும். இலங்கைத் தமிழர்களின் உணர்வுகளை நசுக்க வேண்டும் என்பதே அவருடைய திட்டம். இதற்கு இந்தியா ஒருபோதும் இடமளிக்கக் கூடாது.

இந்தப் பிரச்சினையில் இந்தியத் தமிழர்களின் உணர்வுகளுக்கு எதிராகவும் இவர்களது ஒட்டுமொத்த உணர்வுகளைப் புறக்கணிக்கும் வகையிலும் இந்திய அரசு செயற்படாது என்று இங்குள்ள தமிழர்களுக்கு நம்பிக்கை இருக்கிறது.

அரசியல் மற்றும் பொருளாதார உரிமைகளைப் பெற்று சிங்களவர்களுக்குச் சமமாக இலங்கைத் தமிழர்கள் வாழ வழிகாண வேண்டும். இதற்கு இந்தியா உதவ வேண்டும். இதுதான் இங்குள்ள தமிழர்களின் ஒட்டுமொத்தமான நிலை.

இலங்கை ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தும் போது, இந்திய அரசு இதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

நோர்வே நாட்டின் சமரச முயற்சியைத் தொடர வேண்டும் என்றும் இலங்கை அரசு அதனை ஏற்க வேணடும் என்றும் இந்தியா வலியுறுத்த வேண்டும்.

இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரையில் விடுதலைப் புலிகள் தான் தங்களது ஏகபிரதிநிதி என்ற நிலைமையில் உள்ளனர்.

எனவே எந்தத் தீர்வானாலும் ,அது விடுதலைப் புலிகளுடன் மட்டுமே செய்து கொள்ளவேண்டும். அப்படி ஏற்படும் உடன்பாட்டை வெற்றிகரமாக அமுலபடுத்தும் கண்காணிப்புப் பொறுப்பை இந்தியா ஏற்க வேண்டும்.

இது மட்டுமதான் இலங்கை இனப் பிரச்சினைக்குத் தீர்வாக அமையும். இதை இந்தியப் பிரதமரின் கவனத்திற்குக் கொண்டு சென்றிருக்கிறேன். அவருக்குத் கடிதமும் எழுதியுள்ளேன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது, (த)


# தமிழ்ப்பணியோடு மறைப் பணிகளையும் ஆற்றிய செயல் வீரர் பரராஜசிங்கம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் திடீர் அகால மரணம் எம்மை கவலையிலும் அதிர்ச்சியிலும் ஆழ்த்தியுள்ளது. திருமலை மட்டு நகர் மறை மாவட்ட ஆயர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை கிறிஸ்மஸ் நள்ளிரவுத் திருப்பலியை பேராலயத்தில் நிகழ்த்திக் கொண்டிருந்த போது நற்கருணை பெற்றுக்கொண்ட பின்னர் ஜோசப் பரராஜசிங்கம் ஆலயத்தில் வைத்து படுகொலை செய்யப்பட்டுள்ளார். இச் சம்பவத்தை நன்மனதுள்ள எவரும் நியாயப்படுத்த முடியாது. மனிதாபிமானமற்ற இக் கொடூரச் செயலைச் செய்தவர்கள் இறைவனின் நீதித் தீர்ப்பிற்கு உள்ளாவார்கள்.

இவ்வாறு ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலை குறித்து யாழ்.மறை மாவட்ட ஆயர் குருக்கள் துறவியர் விடுத்த அனுதாபச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1934 ஆம் ஆண்டு பிறந்த இவர் ஊடகவியலாளராகத் தனது பணியினை ஆரம்பித்து 1990ஆம் ஆண்டு முதல் நாடாளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றி வந்துள்ளார். இவர் 1994, 2000ஆண்டுகளில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல்களில் வடகிழக்கில் மிக அதிக வாக்குகள் பெற்றுத் தெரிவு செய்யப்பட்டமை மக்களால் விரும்பப்பட்டு மக்களுக்காகப் பணியாற்றிய ஒரு சிறந்த தலைவர் என்பதற்கு எடுத்துக் காட்டாகும்.

ஆங்கில புலமைபெற்ற தமிழ் அரசியல்வாதிகளில் ஒருவரான இவர் பொதுநலவாய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைப்பின் நிர்வாகக் குழு உறுப்பினராகவும் சார்க் நாடுகளின் பாராளுமன்ற குழு உறுப்பினராகவும் பதவி வகித்துள்ளார்.



தமது தமிழ்ப் பணிகளோடு கத்தோலிக்க மறைப் பணிகளையும் இவர் ஆற்றியுள்ளார். திருமலை மட்டு நகர் மறை மாவட்ட யூபிலி கொண்டாட்டங்களின் போது இவர் ஆற்றிய பங்கு மகத்தானது. ஆயரோடு மிக நெருக்கமாகப் பணியாற்றி கத்தோலிக்கத் திருச்சபையின் உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கின்ற ஒருவராக இவர் திகழ்ந்திருக்கிறார். கத்தோலிக்க பாராளுமன்ற உறுப்பினர்களோடு ஆயர் பேரவையைச் சந்தித்தபோது கத்தோலிக்கத் திருச்சபைக்கு ஆற்ற வேண்டிய பல பணிகளை முன்னெடுத்து அவற்றை செயல்படுத்த அயராது உழைத்திருக்கின்றார்.

உத்தம கத்தோலிக்க வாழ்வு வாழ்ந்து தமிழ் மக்களின் சுபீட்சமான வாழ்விற்காகத் தன்னை அர்ப்பணித்த இத் தலைவர் தனது எல்லா நல்ல பணிகளுக்காகவும் இறைவனின் நிறைவான சம்பாவனையைப் பெற்றுக்கொள்ளுவார் என அந்த அனுதாபச் செய்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து)

# மக்களிடம் அடிவாங்க நாம் தயாரில்லை

## மஹிந்தவின் உத்தரவை அமைச்சர்கள் நிராகரிப்பு

(கொழும்பு)

தமிழர் தாயகத்தில் மேற்கொள்ளப்படும் தாக்குதல்களில் கொல்லப்படுகின்ற இராணுவத்தினரின் இறுதி நிகழ்வுகளில் அமைச்சர்கள் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும் என்று புதுடில்லியிலிருந்து ஜனாதிபதி ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

ஆனால் மஹிந்த ராஜபக்ஷவின் உத்தரவை பல மூத்த அமைச்சர்கள் நிராகரித்துள்ளனர்.

புதுடில்லியிலிருந்து பாதுகாப்புச் செயலாளர் கோட்டபாய ராஜபக்ஷவை தொலைபேசியில் தொடர்பு கொண்ட மஹிந்த ராஜபக்ஷ இது தொடர்பிலான அறிவுறுத்தல்களை விடுத்திருந்தார்.

கொல்லப்பட்ட ஒரு இராணுவச் சிப்பாயின் நிகழ்வில் ஆகக் குறைந்தது 5 அமைச்சர்களாவது கலந்து கொள்ள வேண்டும் என்றும் மஹிந்த அறிவுறுத்தியிருந்தார்.இதுதொடர்பாக பாதுகாப்பு அமைச்சகம் அமைச் சர்களுக்குத் தகவல் அனுப்பியது.

பாதுகாப்பு அமைச்சகத்தைத் தொடர்பு கொண்ட சில மூத்த அமைச்சர்கள் தாங்கள் இராணுவத்தினரது இறுதி நிகழ்வில் பங்கேற்கச் சென்று மக்களின் தாக்குதலுக்குள்ளாகத் தயாராக இல்லை என்றும் வேண்டுமானால் கடும்போக்குக் கொள்கைகளை கடைப்பிடித்து வருகிற ஜாதிக ஹெல உறுமய, ஜே.வி.வியினரை பங்கேற்கச் சொல்லுங்கள் என்றும் கூறியுள்ளனர்.

நாட்டின் தற்போதைய நிலைமைகளுக்கும் இராணுவத்தினரது மரணங்களுக்கும் ஜாதிக ஹெல உறுமய, ஜே.வி.பியினரது கடும்போக்குக் காரணம் என்பதால் அவர்களே இந்த மரணங்களுக்கும் பொறுப்பேற்க வேண்டும் அவர்களே இராணுவத்தினரது இறுதி நிகழ்வில் பற்கேற்க வேண்டும். அரசாங்க அமைச்சர்கள் பொறுப்பேற்கவோ பங்கேற்கவோ மாட்டார்கள் என்றும் அந்த அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர். (த)

# பொதுமக்கள் கொலை செய்யப்படுவதை கண்டிக்கிறார் கஜேந்திரன் எம்.பி

(யாழ்ப்பாணம்)

கடந்த புதன்கிழமை யாழ்.குடாநாட்டில் முத்திரைச் சந்திப்பகுதியில் மோட்டார் சைக்கிளில் பிரயாணம் செய்து கொணடிருந்த இளைஞர் இருவரும் இராணுவத்தினரால் கண்மூடித்தனமாகச் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். போர் நிறுத்தத்தினை மீறும் வகையில் படையினரால் மேற்கொள்ளப்பட்ட இப்படுகொலைச் சம்பவத்தினை மிகவும் வன்மையாகக் கண்டித்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் அறிக்கையொன்றை விடுத்துள்ளார்.

வடக்குக் கிழக்கில் படையினர் கொல்லபபடுகின்றார்கள் என்பதற்காக அப்பாவித் தமிழ் இளைஞர்கள், யுவதிகள், முதியவர்கள், சிறுவர்கள் அநியாயமாகக் கொல்லப்படுவதனை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது. அதனை எந்தவகையிலும் நியாயப்படுத்தவும் முடியாது.

அதேவேளை, படையினர் மீதான தாக்குதல்களை கட்டுப்படுத்தும் நோக்கில் அப்பாவிப் பொதுமக்களை எவ்வித காரணங்களுமின்றி காட்டுமிராண்டித்தனமாக அடித்து சித்திரவதை செய்வதோ கொலை செய்வதோ நிலைமைகளை மேலும் மேலும விபரீத நிலைக்கே கொண்டு செல்லும்.

அப்பாவிப் பொதுமக்கள் இவ்வாறு அடித்துச் சித்திரவதை செய்யப்படுவதும், கொல்லப்படுவதும் தொடருமாயின் இளைஞர்களும் யுவதிகளும் தமது பாதுகாப்புக் கருதி பொங்கி எழும் ம்க்கள் படையாக மாறி படையினருக்கு எதிராக செயறபடும் நிலையை ஊக்குவிப்பதாகவே அமையும்.

அப்பாவிப் பொதுமக்கள் மீதும, இளைஞாகள் யுவதிகள், மாணவர்கள் மீதும் இராணுவம் மேற்கொண்டு வரும் கண்மூடித்தனமான தாக்குதல்கள், சித்திரவதைகள், கொலைகளை உடன் நிறுத்தி, மக்கள் குடியிருப்புக்களிலுள்ள இராணுவத்தினரை உடன் அப்புறப்படுத்தி பேச்சுக்களை உடன் ஆரம்பிப்பதே படையினர் மீதான தாக்குதல்களை கட்டுப்படுத்த ஒரே வழி. இல்லையேல் பொதுமக்களின் பதில் தாக்குதலுக்கு படைத்தரப்பு முகம் கொடுக்க வேண்டிய சூழல் உருவாகலாம் என அதில மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (த)

## சோதனையின் பின்னரே பயணிக்க அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் கடத்தப்பட்ட மிதிவெடி அகற்றும் நிறுவனத்தின் வாகனங்கள் இரண்டும் நேற்று முன்தினம் இளவாலைப் பகுதியில் மீட்கப்பட்டுள்ளன.

இந்தக் கடத்தல் சம்பவம் காரணமாக இளவாலை, கீரிமலை வீதியில் இராணுவப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் வீதியால் செல்லும் வாகனங்கள் மற்றும் பயணிகள் சோதனையின் பின்னரே விளான் இராணுவ முகாமிற்கு முன்பாக பயணிக்க அனுமதிக்கப்படுவதாக தெரிவக்கப்படுகிறது. (அ-7)

## வருடாந்த கலைவிழா

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி ஸ்ரீகணேசா முன்பள்ளியின் வருடாந்த கலைவிழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை முன்றலில் ஐ.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. (த)

## ஆத்மசாந்திப் பிரார்த்தனை

(கொக்குவில்)

ஸ்ரீராம கிருஷ்ண சேவாச்சிரமம, ஆழிப்பேரலை அனர்த்தத்தால் நாட்டிலும், உலகின் பல பகுதிகளிலும மரணமடைந்தவர்களின் ஒரு வருட நினைவாகவும், அண்மைக் காலமாக இயற்கை அனர்த்தங்களாலும் மற்றும் யுத்த அனர்த்தங்களாலும் பலியானவர்களுக்காக இறைவனை மனமுருகப் பிரார்த்தனை செய்வதற்காக இன்று மாலை 4.30 மணிக்கு தாவடி இ.த.க பாடசாலையின் பழைய கட்டடத்தில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையொன்றை நடாத்தவுள்ளது. (த-7)

## கிளைமோர் மீட்பு

(மன்னார்)

மன்னார் மடுவீதியில் இரண்டு கிளைமோர் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன. இவை இரண்டும் செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை மரமொன்றில் மறைத்து வைக்கப்பட்ட கிளைமோர் ஒன்றும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. (த-2)

## திருவிழா

(ஊர்காவற்றுறை)

கடந்த 28ஆம் திகதி காலை 7.00 மணிக்கு ஊர்காவற்றுறை புனிதமரியாள் ஆலயத்தில் நடைபெற்ற 'மாசில்லாக் குழந்தைகள்' திருவிழாவில் இருநூற்றுக்கு மேற் பட்ட குழந்தைகள் கலந்துகொண்டனர். (72)

## தலாய்லாமா இலங்கை வருவார்

(கொழும்பு)

திபெத்தின் ஆன்மீக தலைவர் தலாய்லாமா எதிர்வரும் மே மாதம் இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

புத்தபெருமான் பரிநிர்வாணமடைந்து 2550 வருடங்கள் பூர்த்தியடைவதை முன்னிட்டு சிங்கள மாபோதி சங்கம் ஏற்பாடு செய்துள்ள நிகழ்வில் பங்கேற்கு முகமாகவே தலாய்லாமா இலங்கைக்கு வரவுள்ளார். (த)

## கணனி அன்பளிப்பு

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் சங்கத்தின் சமாசத்திற்கு பன்முகப்படுத்தபபட்ட வரவு செலவு திட்டத்தின்கீழ் கடற்றொழில் நீரியல் வள துறைத் திணைக்களம் ஒரு கணனியையும் உபகரணங்களையும் வழங்கியுள்ளது.

மேற்படி சமாசத்திற்கு ஜி.ரி.இசற் நிறுவனம கணனி தொகுதி ஒன்றினை வழங்கியுள்ளது. (த-35)

## அம்பாறையில் ஹர்த்தால்

(அம்பாறை)

அம்பாறை-திருக்கோவில் பிரதேசத்தில் நேற்றுக் ஹாத்தால் அனுஷ்டிக்கப்பட்டது. இதனால் திருக்கோவில் உட்பட்ட பல பிரதேசங்களில் அன்றாட நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் இந்த ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. நேற்றுக் காலை முதல் கடைகள் அலுவலகங்கள் மூடப்பட்டிருந்தன.

பிரதேசத்தின் போக்குவரத்துக்களும் பாதிக்கப்பட்டிருந்ததாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ச-7)

# புத்தளம் நகரசபையின் மாதாந்தக் கூட்டத்தில் உறுப்பினர்கள் வாக்குவாதம்

(புத்தளம்)

புத்தளம் நகர சபையின் மாதாந்த அமர்வு நேற்று வியாழக்கிழமை இடம் பெற்றபோது ஆளுந்தரப்பு உறுப்பினர்களுக்கும், சபையின் தலைவர்களுக்கு மிடையில் கடும் வாக்குவாதம் இடம்பெற்றது.

புத்தளம் நகர சபையின் தலைவராக செயற்பட்டுவருகின்ற டொன் குயின்டன் ஜோசப், சபைக்கு அறிவிக்காமல் தொடர்ச்சியாக மூன்று சபை அமர்வுகளுக்கு சமுகமளிக்காமல், வெளிநாடு சென்றமையால, இச்சபைக்கு புதிய தலைவர் ஒருவரை நியமிக்குமாறு கோரி, சபை உறுப்பினர்கள் ஏகமனதாக தீர்மானமொன்றை நிறைவேற்றி முதலமைச்சர், வடமேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோருக்கு கடிதம் அனுப்பப்பட்டதையடுத்து, திடீரென சபைத் தலைவர் டொன் குயின்டன் ஜோசப் சபைக்கு எவ்வாறு தலைமை தாங்குவது என்பதால் ஏற்பட்ட வாக்குவாதம், உறுப்பினர்களுக்கும் தலைவருக்குமிடையில் சொற்போரில் முடிவுற்றது.

புத்தளம் நகர சபையின் மாதாந்த கூட்டம் நகர சபையின் கேட்போர் கூடத்தில் தலைவர் பொன் குயின்டன் ஜோசப் தலைமையில் நடைபெற்றது.

இதில நகரசபையின் ஸ்ரீலங்கா முஸ்லிம காங்கிரஸ் உறுப்பினர்களான ஏ.ஓ.அலிகான், ஏ.என்.எம்.ஜவூபர் மரைக்கார் ஆகியோர் தலைவரின் செயற்பாடுகளை கடுமையாக விமர்சித்ததுடன், சொற்போரையும் மேற்கொண்டதால், சபை அல்லோல கலலோலப்பட்டது.

சபையின் செயற்பாடுகளை முன்னெடுப்பதில், தலைவர் பெரும் பிரயத்தனத்தை மேற்கொள்ள வேண்டியேற்பட்டது.

பின்னர் நிலைமையை கட்டுப்படுத்தும் வகையில் சபைத்தலைவர் டொன் குயின்டன் ஜோசப், தமது வெளிநாட்டுப்பயணம் குறித்தும், அதற்கான அனுமதி உரிய முறையில் பெறப்பட்டதாகவும், சபைக்கு அறிவிக்காமல் சென்றமைக்கு சபை உறுப்பினர்களிடத்தில் மன்னிப்பு கோருவதாகவும் கூறியதையடுத்து, சபையின் நடவடிக்கைகளை முன்னெடுக்க ஆதரவு வழங்கினர்.

எதிர்க்கட்சித் தலைவர் எம்.என்.எம்.நஸ்மி, ஆளும் கட்சி உறுப்பினர்களான அக்ரம் மொஹிதீன், வை.எம்.நிஸ்தார், எம்.ஐ.எம்.ரிபாய், உதித் ரத்னாயக்க, ஹஸீல் மொஹமட் ஆகியோரும் சபையில் பிரசன்னமாயிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-15)

# சமூக, உளவியல், சுகாதாரம்

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள ஐந்து பாடசாலைகளில் சமூக, உளவியல், சுகாதாரம் என்ற திட்டம் செய்படுத்தப்படவுள்ளது.

மருதங்கேணி கல்விக்கோட்டத்தில் மருதங்கேணி இ.த.கலவன் பாடசாலை உடுத்துறை மகாவித்தியாலயம், ஆழியவளை, சி.சி.த.க. பாடசாலை, வெற்றிலைகேணி பரமேஸ்வரா வித்தியாலயம், கேவில அ.த.க பாடசாலை ஆகியன இதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன.

டென்மார்க் செஞ்சிலுவைச் சங்க நிதியுதவியுடன் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் இத்திட்டத்தினை செயற்படுத்தவுள்ளது.

இத்திட்டத்தினை செயற்படுத்துவதற்கு மேற்படி பாடசாலையிலிருந்து 22 ஆசிரியர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-35)

# சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தும் திருடர்கள்

(யாழ்ப்பாணம்)

தற்பொழுது யாழ்ப்பாணத்தில் இடம் பெறும் இராணுவத் தாக்குதல், இராணுவததைத் தாக்குதல், சுற்றிவளைப்பு போன்ற சம்பவங்களைச் சில திருடர்கள் தமது தொழிலுக்குச் சாதகமாகப் பயன்படுத்துவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

இராணுவத்துக்கு பயந்து ஓடி வருவது போல ஆண்கள் இல்லாத நேரம் பார்த்து வீடுகளுள்புகுந்து இராணுவம் போகும் வரை தங்கி நிற்க அனுமதி கேட்டு, சந்தர்பபத்தைப் பயன்படுத்திக் கையில் அகப்பட்டவற்றைச் சுருட்டிக் கொண்டு செல்லும் சம்பவங்கள் இப்பொழுது பரவலாகப் பல இடங்களில் நடைபெறுவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது.

சமீபத்தில் அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்று வீட்டில் மனைவியுடன் மாததிரம் வசித்துவந்த ஒருவரது வீட்டினுள் புகுந்த ஒருவன் தன்னை ஆமி துரத்தி வருகிறது என்று கூறி, சிறிது நேரம் தங்கி நிற்க அனுமதி கேட்டிருக்கிறான். அவன மீது அனுதாபப்பட்ட அந்த ஓய்வூதியரும் அவனை உள்ளே அழைத்து அமரச் செய்து பேசிக் கொண்டிருக்கையில் அவன குடிப்பதற்கு தண்ணீர் வேண்டுமெனக் கேட்டிருக்கிறான்.

அவனுக்குத் தண்ணீர் எடுத்துவர அந்த ஓய்வூதியர் உள்ளே சென்றதும் மேசை மீது வைக்கப்பட்டிருந்த அவரது செல்போன், கைக்கடிகாரம், விலை உயர்ந்த பேனா ஆகியவற்றை சுருட்டிக்கொண்ட அவன், சிறிது நேரத்தால் தான் போகப் போவதாகக் கூறிப்புறப்பட்டு எனக்கு இந்தப் பக்கம் புதிது, மெயின் றோட்டைக் காட்டி விட்டால் போய்விடுவேன் என்று சொல்ல அந்த ஓய்வூதியரும் அவனை தனது சயிக்கிளில் ஏற்றிக்கொண்டு புறப்பட்டிருக்கிறார்.

இடைவழியில் சயிக்கிளில் இருந்து குதித்த அவன் அந்த ஓய்வூதியரை சயிக்கிளிலிருந்து தள்ளிவிழுத்தி விட்டு அவர் அணிந்திருந்த கழுத்துச் சங்கிலியை அறுத்துக் கொண்டு ஓடிவிட்டான்.

சயக்கிளில் இருந்து தள்ளிவீழ்த்தப் பட்டதால் கால் முறிந்த நிலையில் கிடந்த அவரை அவ்வழியால் சென்ற சிலர் அவரது வீட்டுக்கு எடுத்துச் சென்றிருக்கிறார்கள்.

இச்சம்பவத்தையடுத்து வீட்டில் தனியாக இருக்கும் பெண்கள், ஆண்கள் வீட்டிலிருந்து புறப்பட்டதும் வாயிற்கேற்றை பூட்டி வைகக ஆரம்பித்துள்ளதாகத் தெரிகிறது. (து)

## வைத்தியசாலையில் அனுமதி

(திருகோணமலை)

திருகோணமலை கரையோரப் பகுதியில் வெட்டுக்காயங்களுடன் இருந்த ஒருவரை பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

தற்போது அந்த நபர் வைத்தியசாலையில அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 8.45 மணியளவில் இனந்தெரியாத நபர்களால் இவர் கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-7)

## ஊற்று நிறுவனம் உதவி

அண்மையில் ஏற்பட்ட மழை வெள்ளத்தால் பாதிப்புக்குள்ளான பருத்தித்துறை பகுதியைச் சேர்ந்த இன்புருட்டி சக்கோட்டை, புனிதநகர், முனை, வியாபாரி மூலை சுப்பர்மடம், ஊறணி ஆகிய கிராமங்களில் உள்ள சுமார் 600 குடும்பங்களுக்கு உடுபுடைவைகள், பாய் போன்ற பொருட்களை இலங்கை சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் அனுசரணையுடன் ஊற்று நிறுவனம் நேரடியாக சென்று குறித்த பாதிபபுக்குள்ளான பிரதேசத்தில் இனங்கண்டு விநியோகித்தது.

இதேவேளை, மேற்படி நிறுவனத்தால் ஒரு தொகுதி கையுறைகளும், தொற்று நீக்கி மருந்துகளும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கும் வல்வெட்டித்துறை வைத்தியசாலைக்கும் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(த-101)

## ஞானச்சுடர் வெளியீடு

(மருதங்கேணி)

தொண்டமனாறு செல்வச் சந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினால் மாதம் தோறும் வெளியிடப்படும் ஞானச்சுடர் ஆன்மீக சஞ்சிகையுடன் மார்கழி மாதம் சஞ்சிகை இன்று வெள்ளிக்கிழமை மு.ப.10.30 மணிக்கு வெளியிடபபடவுள்ளது.

இதன் வெளியீட்டுரையை என்.தேவதாசனும் (ஜே.பி), மதிப்பீட்டுரையை ஆறுமுகம் ஸ்ரீஸ்கந்தமூர்த்தியும் வழங்கவுள்ளனர். (த-35)

## புதிய அதிபர் நியமனம்

(துன்னாலை)


கரவெட்டி கரணவாய் வேதராணீஸ்வரா வித்தியாலயத்திற்கு வடமராட்சி வலய கல்வித்திணைக்களத்தால் கரணவாய் மகாவித்தியாலயத்தில் உப அதிபராக கடமையாற்றிய இரவீந்திரன் புதிய அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னர் இங்கு கடமைபுரிந்த அதிபர் எம்.ஜெயவரதராஜா இடமாற்றம் பெற்றுச் சென்றதையடுத்து சில மாதங்களாக அதிபர் பதவி வெற்றிடமாக இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

(த-101)

# கிருபானந்தவாரியார் வாழ்க்கை வரலாறு

77



அடியேன் பாடிய பாடல் இது:-

நேரிசை வெண்பா
தன்னை நிகரான தாயே! கனகவல்லி
முன்னையறி தெய்வமே! முத்தியாம்-நன்னலத்தை
நன் றுநீ நண்ணினாய் நற்குணமே ரானநினை
என்று நாம் காண்போம் இனி.

தாயாருடைய மறைவைக் குறித்து அன்பர்கள் பாடிய பாடல்கள் பலவற்றுள் சில,

கோயில்பட்டி சிவக்கிழார் திருநாவுக்கரசனார்:- அன்னைக்கு அர்ப்பணம்.

*விருத்தம்*

1. அருள் மிகுந்த காங்கேய நல்லூர் வாழ்ந்த
ஆயில்வேலன் அடிமறவா அடிய ரான
தெருள்மிகுந்த மல்லைய ரோடில் வாழ்வில்
செம்மையுற நன்மைபல திறம்பா தாற்றி
மருள்மிகுந்த மக்கள்சைவ வாய்மை நிற்க
வாக்குமனம் காயத்தால் வையம்போற்ற
பொருள்மிகுந்த பணியாற்றும் சேயை யீன்ற
புண்ணியமாம் கனகவல்லிப் பொற்றாள் போற்றி.

2. வாழ்வாங்கு வாழ்ந்துயர்ந்த வாழ்வே போற்றி
மண்ணுலகில் புண்ணியஞ்சேர் மக்கள் பெற்று
நீள் வாழ்நாள் பெற்றுநோ யின்மை பெற்று
நிறைவாழ்வில் பொறையுடனே சூழ்ந்தோர்க் கெல்லாம்
தாழ்வுற்ற போதெல்லாம் உதவி ஈந்து
தணிகையர சடி யினையைத் தலைமேற்கொண்டு
ஊழ்பெற்ற வாழ்நாளைத் தவத்தாற் போக்கி
உமைமதலை மலரடியே உற்றாய் போற்றி.

3. மீண்டிருந்தக் கருவழியில் புகுதா துய்ந்த
மெய்த்தவமே உத்தமநற் குணமார் குன்றே
ஈண்டுந்தன் அபிமானப் புதல்வ னாக
இலங்குகின்ற ஏழையுன்றன் இணையார் பாதம்
பூண்டெந்தன் மனத்தகத்துப் பொதிந்து பொன்போல்
போற்றுகிறேன் ஆசியெனக் கருளல் வேண்டும்
தூண்டாநன் மணிவிளக்கே! கனக வல்லித்
தூயதவத் தாயே! நின் துணைத்தாள் போற்றி.

இந்தப் பாடலைப் பாடிய அன்பர் கோயில்பட்டி சிவக்கிழார் திருநாவுக்கரசனார். இவர் என்னுடைய அபிமானத் தம்பி, திருவருள் தவநெறி மன்றத்தின் சார்பில் ஊர் தோறும் சென்று விரிவுரை பணி செய்யுமாறு மாதந்தோறும் ஊதியமாக 100 ரூபாய் வழங்கி வந்தேன். இப்படி 10ஆண்டுகள் நடைபெற்றது. இவர் ஒருநாள் என்னைப் பார்த்து "அண்ணா! எனக்கு மொத்தமாகப் பதினாயிரம் ரூபாய் கொடுங்கள். அதை வைத்துக்கொண்டு நான் ஒரு தொழில் செய்து பிழைத்துக்கொள்ளுவேன்" என்றார்.

அதுபடி நான் கடன் வாங்கி 10ஆயிரம் கொடுத்துப் பின்னர் அந்தக் கடனை அடைத்தேன்.

இவர் நெல்லை உயர்திரு. கா.சுப்ரமண்ய பிள்ளையின் மாணவர். நல்ல சீலம் உடையவர். சிவபூஜா துரந்தரர் என்பால் மிகுந்த அன்பு பூண்டவர்.

அன்னை
கனவல்லி அம்மையார் பிரிவால் பாடிய
கையறு நிலைப் பாடல்கள்
மீ.பாலசுப்ரமண்யம்
நேரிசை வெண்பா

1. அன்பு மகனை அறப்பணியே செய்மகனை
இன்பநெறி காட்டும் எழில்மகனை - மன்புவிக்குத்
தந்த கனகவல்லித் தாயே! யுனைய்டியேம்
எந்தநாள் காண்போம் இனி.

2. அகவைநூ றெய்தி அறவாழ்வி லென்றும்
தக்மை யுடன் வாழ்ந்த தாயே! -இமதிகல்
மெய்வழி மேவி மிகுந்த நலம்பெருக
தெய்வமாய் நின்றருளைச் செய்.

3. தில்லைப் பதியான் திருவடிவில் ஒன்றிமகழ்
மல்லைய தாசர் மனைவிளக்கே! - எல்லையிலா
மாண்பு மிகுபதியார் வானுலக வாழ்வையங்குக்
காண்பதற்கோ சென்றாய் கனிந்து.

4. உற்றார் கதறியழ ஊரார்கள் ஏங்கியழ
முற்றறிந்த வாரியார் மோதியழ - நற்றவ
அம்மாநீ! எம்மை அனாதையாய் ஆக்கிவிட்டாய்
இம்மையில்யாம் செய்தகுறை என்.

5. நோவு நொடியின்றி நொவ்வுமான வாட்டமின்றி
சாவுநாள் கண்ட தவமுடையோய் - பூவில்
நிறைவாழ்வு வாழ்ந்த உயர் நிலத்லமே! என்றும்
குறைவிலா வாழ்வைக் கொடு.

6. கண்ணிமையாய் நின்றெம்மைக் காலமெல்லாம் காத்திட்ட
பெண்கள் இனத்திற்கோர் பேரொளியே! மண்ணில்
அறக்குன்றாய் வாழ்ந்திட்ட அன்னையே! உன்னை
மறக்குமோ? எங்கள் மனம்.

(தொடரும்)

## மலையக மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு பொது ஆவணம் அமைப்பு

(கொழும்பு)

சமாதான இறுதித்தீர்வுப் பேச்சுவார்த்தையின் போது மலையக மக்களின் அடிப்படை மற்றும் அரசியல் பிரச்சினைகளுக்கும் தீர்வுகாணப்பட வேண்டும் என்பதில் தமிழீழ விடுதலைப புலிகளுக்கும், மலையகக் கட்சிகளுக்கும் இடையில் இணக்க நிலை தோன்றியுள்ளது.

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் அஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்டபின் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரன் ஆகியோருக்கும் விடுதலைபபுலிகளின அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும் இடையில் சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது மலையக மக்களின் அடிப்படை மற்றும் அரசியல் கோரிக்கைகள் தொடர்பான பொது ஆவணம் ஒன்றைத் தயாரிப்பது குறித்து தீர்மானிக்கப்பட்டது.

இந்தப் பொது ஆவணம், எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வநதாலும் மலையக மக்கள் தொடர்பில் பேச்சு நடத்துவதற்குரிய பொதுவான ஒன்றாக அமைய வேண்டுமென தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார். (த)

## மீனவர்கள் மீதான கெடுபிடிகள் மன்னாரில் அதிகரிப்பு!

(மன்னார்)

மன்னாரில் மீன்பிடித் தொழிலை முடக்கும் வகையில் இராணுவததினர் கடும் நிபந்தனைகளை விதித்துள்ளனர்.

30 குதிரை சக்தி வலுவுக்கு மேற்பட்ட படகுகளை மீனவர்கள் பயன்படுத்தக்கூடாது. மீனவர்கள் கடலுக்குள் செல்லும்போது அடையாள அட்டையினை கட்டாயம் எடுத்துச்செல்லவேண்டும். என்பது உள்ளிட்ட பல்வேறு அழுததங்களையும் கெடுபிடிகளையும் விதித்து மீனவர்கள் மீது இராணுவத்தினர் நெருக்குவராங்களை அதிகரிப்பதால் அங்கு மீன்பிடித் தொழில் முடங்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. (த)

## பண்ணிசைப்போட்டி

(மருதங்கேணி)

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் நடாத்தப்படும் திருவாசக விழா பண்ணிசைப் போட்டி எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை மேற்படி ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ளது.

மூன்று பிரிவுகளாக நடைபெறும் இப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு எதிர்வரும் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும் திருவாசக விழாவில் பணத்தொகையும், பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. (த-35)

## அபிவிருத்தித் திட்டங்கள் -2006 அமைச்சு விபரம் சேகரிப்பு

(கொழும்பு)

அனைத்து அமைச்சுக்களின் வரவு-செலவுத்திட்டம் மூலமான அடுத்த வருடம் மேற்கொள்ளப் படவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக தகவல்களைத் திரட்ட நிதி அமைச்சு தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் ஜனவரி 15ஆம் திகதிக்கு முன்னர் இந்தத் தகவல்களை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சின் வரவு-செலவுத்திட்டப் பணிப்பாளர் மஹிந்த சாபிய தெரிவித்துள்ளார்.

அனைத்து அமைச்சுக்களுக்கும் இது தொடர்பான சுறறறிக்கையை நிதி அமைச்சு அனுப்பி வைத்துள்ளது. வரவு-செலவுத் திட்டத்தின் ஊடாக முன்வைக்கப்பட்டுள்ள துரித அபிவிருத்தித் திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டும் என்று அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

அவ்வாறான திட்டங்களை ஜனவரி மாதத்திலேயே ஆரம்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நிதி அமைச்சு கேட்டுள்ளது. (த-7)

## இலஞ்சம்பெற்ற சுங்கப் பணிப்பாளர் கைது

(கொழும்பு)

சுங்கப் பணிப்பாளர் ஒருவரை இலஞ்ச ஊழல் மோசடி குற்றத் தடுப்பு ஆணைக்குழு கைதுசெய்துள்ளது.

முறையற்ற விதத்தில் 62 இலட்சம் ரூபா சொத்துக்களை சேகரித்துள்ளார் என்று இவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாலை இவர் கைது செய்யப்பட்டதாக ஆணைக்குழுவின் பணிப்பாளரான பொலிஸ் அத்தியட்சகா நிவில் குருகே தெரிவித்துள்ளார். 62 இலட்சத்திற்கும் மேற்பட்ட சொத்துக்களை முறையற்ற விதத்தில் சேகரித்துள்ளமைக்கான சான்றிதழ்கள் கிடைக்கப் பெற்றதையடுத்து இவர் கைது செய்யப்பட்டுள்ளார். (த-7)



கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் 2005ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் பாராட்டி பதக்கம் அணிவித்து கௌரவிக்கப்பட்டனர். இந் நிகழ்வின்போது பாடசாலை அதிபர், ஆசிரியைகளும் இணைந்து எடுத்துக் கொண்டபடம்.

(படம்:- எஸ். இராமச்சந்திரன்)

# 'அனீமியா' சாதாரணமானதா?



உடல் ஆரோக்கியத்துக்கும், இயக்கத்துக்கும் மிகவும் அவசியமானது இரும்புச் சத்து. இரத்த சிவப்பு அணுக்களில் காணப்படும் ஹீமோகுளோபினை உண்டாக்குவதற்கு இரும்புச் சத்து தேவைப்படுகிறது. இந்தச் சத்துக் குறையும் போது ஹீமோகுளோபின் உற்பத்தி தடைப்பட்டு இரத்த சிவப்பு அணுக்களின் உற்பத்தியைப் பாதிக்கிறது.

இரத்த சிவப்பு அணுக்கள்தான் மனிதன் உயிர்வாழ்வதற்கு தேவையான ஒக்ஸிஜனை நுரையீரலில் இருந்து உடலின் பல்வேறு பாகங்களுக்கு எடுத்துச் செல்கிறது. அப்படிப்பட்ட செல்களின் உற்பத்தி குறைந்தால் உறுப்புகளுக்குப் போகும் ஒக்ஸிஜன் தடைப்படுகிறது. இதனால் உறுப்புக்களின் செயற்பாடு வெகுவாகப் பாதிப்படைகிறது. உறுப்புகள் இப்படி பாதிக்கப்படுவதைத் தான் இரத்தசோகை நோய் என்று சொல்கிறோம்.

இரும்புச்சத்து குறைபாடு ஒரே நாளில் தோன்றி விடுவதில்லை. கொஞ்சம் கொஞ்சமாக உருவாகிறது. இரும்புச் சத்து குறைவதற்கு பல காரணங்கள் இருந்தாலும் முக்கியமான காரணங்களாக கீழ்க்கண்டவற்றை சொல்லலாம்.

1.உணவுமுறையில் தேவையான இரும்புச்சத்து இல்லாதது.
2.இரும்புச்சத்தை உடம்பு ஏற்றுக்கொள்வதில் குறைபாடு.
3.மாத விலக்கு காரணமாக அதிகமான இரத்த இழப்பு ஏற்படுவதும், குடல் பகுதியில் தொடர்ச்சியான இரத்த இழப்பு இருப்பதும்.
4.ஒழுங்கற்ற மாதவிலக்கு காரணமாக இயல்புக்கு அதிகமான இரத்த இழப்பு.

இந்த நோயால் பாதிக்கப்படுபவர்கள் பெரும்பாலும் குழந்தைகளும், பெண்களும்தான். குழந்தைகளைப் பொறுத்தவரை இரும்புச்சத்து குறைவான உணவுகளை சாப்பிடுவதாலோ, போதுமான அளவு இரும்புச்சத்து உட்கொள்ளாததன் காரணமாகவோ இரத்தசோகை எனப்படும் 'அனீமியா' குறைபாடு வர வாய்ப்பு உள்ளது.

இன்னொரு வகையிலும் இரத்தசோகை நோய் வரலாம். வறுமைக்கோட்டுக்குக் கீழே உள்ள குடும்பத்தை சேர்ந்த குழந்தைகளுக்கு இரும்புச்சத்து என்பது பெரிய விஷயம். அவர்கள் பொருளாதார நிலைக்கு சத்துக்குறைந்த ஆகாரங்களைத்தான் உண்ண முடியும். இதனால் இரத்தச் சோகையால் எளிதாக பீடிக்கப்படுகிறார்கள்.

குழந்தைகள் வளரும் பருவத்திலும், வாலிப் பருவத்திலும் அதிகப்படியான இரும்புச்சத்து தேவைப்படுகிறது. அந்தப் பருவங்களில் போதுமான இரும்புச்சத்து கிடைக்காதபோது அனீமியா வரலாம். மேலும் குழந்தைகளுக்கு 12 மாதங்களுக்கு முன்னதாகவே பசும்பால் கொடுக்கிறார்கள். பசும்பாலில் குழந்தைகள் வளர்வதற்குத் தேவையான இரும்புச்சத்து குறைவாகவே இருக்கிறது. மேலும் பசும்பாலானது உடலின் இரும்புச்சத்தை ஏற்கும் தன்மையைக் குறைத்துவிடுவதோடு குடல் பாதைகளை தொந்தரவு செய்கிறது. இதன்காரணமாக குறைந்தளவு இரத்த ஒழுக்கு ஏற்படுகிறது.

குறைப்பிரசவத்தில் பிறக்கும் குழந்தைகளுக்கு கட்டாயம் இரத்தசோகை நோய் ஏற்படுகிறது. ஏனெனில், இந்தக் குழந்தைகள் கருவில் இருக்கும் காலம் குறைவாக இருப்பதால் தாய் மூலமாக கிடைக்கவேண்டிய இரும்புச்சத்து குறைந்துவிடுகிறது. குறைவான எடையில் பிறக்கும் குழந்தைகளுக்கும் அனீமியா வருவதற்கு வாய்ப்பு அதிகம்.

பருவமடையும் வயதில் ஆண், பெண் குழந்தைகளுக்கு கூடுதலான இரும்புச்சத்து தேவைப்படுகிறது. அதிலும் ஆண்களைவிட பெண்களுக்குத் தேவை அதிகம். ஏனெனில் அவர்களுக்கு மாதவிலக்கு ஏற்படுகிற தருணங்களில் இரத்தப்போக்கு காரணமாக பெருமளவு இரும்புச்சத்து வீணாகிவிடுகிறது. இதனால் இரத்தசோகை வர வாய்ப்பு உருவாகிறது.

**இரத்தச் சோகையைக் கண்டுபிடிப்பது எப்படி?**

இரத்தசோகை நோயைப் பொறுத்தவரை குறைபாடுகள் வெளிப்படையாகத் தெரியாது. ஆனாலும், களைப்பு மற்றும் உடல் தளர்வு, வெளுறிய தோல், வேகமான இதயத்துடிப்பு, இதயத்தில் விநோதமான ஒலிகள், கோப உணர்ச்சி, அதிகமான பசி, தலை இலேசாக இருப்பது போல் உணர்தல் ஆகிய அறிகுறிகளை வைத்து இரத்தசோகை நோய் வந்திருப்பதைத் தெரிந்துகொள்ள முடியும்.

# ஆஸ்துமா - உணவுக்கட்டுப்பாடு



குழந்தைகள் தங்களுடைய உணவுப் பழக்கவழக்கங்களை மாற்றிக்கொள்வதால் ஆஸ்துமா ஆபத்து உண்டாகிறது என்று நிபுணர்கள் தெரிவித் துள்ளனர்.

அமெரிக்காவைச் சேர்ந்த மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் குழந்தைகளுக்கு டெமோகிராபிக்ஸ் மற்றும் தோல் டெஸ்ட் எடுத்துப் பார்த்தனர்.

ஆஸ்துமா நோய் உள்ள குழந்தைகளுக்கும், பிரச்சினை இல்லாத குழந்தைகளுக்கும் இது போன்ற டெஸ்ட்கள் எடுக்கப்பட்டன.

அப்போது பழங்கள், நார்ச்சத்துள்ள உணவுகள், இதர சத்துக்கள் அடங்கிய உணவுகள் (விற்றமின் இ, கல்சியம், மக்னீசியம்) போன்ற சத்துக்களை அதிகப்படியாக உணவில் சேர்த்துக்கொள்ளும் குழந்தைகளுக்கு ஆஸ்துமா வாய்ப்பு குறைவாக இருப்பதாகவும், இந்தச் சத்துக்களை சாப்பிடாத அல்லது கிடைக்கப்பெறாத குழந்தைகளுக்கு ஆஸ்துமா வருவதற்கு நிறைய வாய்ப்புகள் இருப்பதாகவும் கண்டறியப்பட்டது.

அதிலும் ஓட்டல் சாப்பாடு சாப்பிடும் குழந்தைகளுக்கு ஆஸ்துமா வருவதற்கு நிறையவே வாய்ப்பு உள்ளதாம்.

# புகை பிடிப்பதை நிறுத்தினால் புண் விரைவில் குணமாகும்




புகைப்பிடிப்பது என்பது தற்போது ஃபெஷனாகி விட்டது. புகைபிடிப்பது உடல் நலத்துக்குத் தீங்கு என்று சிகரெட் பாக்கெட்டில் அச்சிடப்பட்டு இருந்தாலும் அதைப் பொருட்படுத்தாமல் ஊதித் தள்ளுகின்றனர்.

சிகரெட் பிடிப்பதை நிறுத்துங்கள், நிறைய நன்மை கிடைக்கும் என்று மருத்துவ உலகம் அவ்வப்போது கூறி வருகிறது. இருந்த போதிலும் புகைப்பிடிப்போரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் கூடுகிறதே தவிர, குறைவில்லை.

இந்நிலையில், சிகரெட் பிடிப்பதை நிறுத்தினால் ஆ. ரேஷனுக்குப் பிறகு வரும் புண் விரைவில் குணமாகும் என்று ஆய்வில் தெரியவந்துள்ளது.



டென்மார்க் தலைநகர் கோபன்கஜனில் உள்ள பிஸ்பெப் ஜர்க் பல்கலைக்கழக டாக்டர் லார்ஸ் தலைமையிலான குழுவினர் அன்மையில் இதுபற்றி ஆராய்ச்சி செய்தார்கள்.

78 பேர் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பட்டனர். 4 வாரம் கழித்துப் பார்த்தால் புகை பிடிக்காதவர்களுக்கு புண் குணமாகி இருந்தது. புகை பிடித்தவர்களுக்கு 12 சதவீத தொற்றும், புகை பிடிக்காதவர்களுக்கு 10 சதவீத தொற்றும் இருந்தது கண்டறியப்பட்டது.

# கண்ணீரால் கிடைக்கும் கணக்கற்ற நன்மைகள்...



சின்ன விஷயங்களுக்குக் கூட அழுபவர்களை பலவீனமானவர்கள் என்கிறோம். இன்னொருபக்கம் அழுது அழுதே காரியத்தை சாதித்துக் கொள்பவர்கள் என்கிறோம். அவர்களுக்கு அறிவுரையும் செய்கிறோம். ஆனால் கண்ணீர் விடுவது என்பது ஆரோக்கியம் தொடர்பான செயல் என்பது எத்தனை பேருக்குத் தெரியும்?

**கண்ணீரின் நன்மைகள்**

* அளவுக்கதிக துக்கம், உடல் நலமின்மை, சந்தோஷம் போன்ற சந்தர்ப்பங்களில் கண்ணீர் வருகிறது. மேற்படி சந்தர்ப்பங்களில் இரத்த அழுத்தம் அளவுக்கதிமாக அதிகரித்து, இதயத்திற்குப் பாதிப்பு ஏற்படாமலிருக்க கண்ணீர் உதவுகிறதாம்.

* கண்ணீர் சிந்தும்போது உடலுக்குத் தீமை விளைவிக்கக்கூடிய சில வேதிப்பொருட்கள் வெளியேற்றப்படுவதாகத் தெரிகிறது. அவற்றில் மனச்சோர்வுக்குக் காரணமான ஹோர்மோன் பல்வேறு வலிகளுக்குக் காரணமான என்டார்ஃபின், கவலைகளுக்குக் காரணமான ஹோர்மோன் ஆகியவை அடக்கமாம். கண்ணீர் சிந்துவதன் மூலம் உடலைப் பாதிக்கும் இவ் இரசாயனப் பொருட்கள் உடலுக்குள்ளேயே தேங்கி விடாதபடிக்கு வெளியேற்றப்படுகின்றன.

* அழுகை என்பது பலவீனத்தின் அடையாளம் என்றும், அழுதால் யார் என்ன நினைப்பார்களோ என்றும் பலர் அழுகையை அடக்கிக் கொள்வதுண்டு. ஆனால் இது மிகவும் தவறான பழக்கம் என்கிறார்கள் மருத்துவர்கள். எந்த மாதிரியான அற்ப காரியமானாலும் சரி, அழவேண்டும் என்று தோன்றினால் உடனே அழுது தீர்த்து விடுவதே உடலுக்கு ஆரோக்கியமானது என்கிறார்கள் அவர்கள்.

* கட்டுக்கடங்காத சோகத்திலும், துன்பத்திலும் பகிர்ந்துகொள்ள யாரும் இல்லாதவர்கள், அழுகையின் மூலம் தன் மனப்பாரத்தை இறக்கிவைக்கலாம். அழுகைக்குப் பிறகு அவர்களது மனம் லேசாகிறது.

* அழுவதை பலவீனமான செயலாக நினைத்துக் கட்டுப்படுத்திப் பழகுபவர்களுக்குப் பின்னாளில் அல்சர் போன்ற பலவித வியாதிகள் வரவும் வாய்ப்புகள் அதிகமாம்.

* இருதயம் பலவீனமாக உள்ளவர்களால் அளவுக்கதிக சோகத்தை மாதிரியே அளவுக்கதிக சந்தோஷத்தையும் தாங்க முடியாது. அவர்கள் அப்போது அழுதால் அவர்களது இருதயம் பாதிப்பின்றி காப்பாற்றப்படுகிறதாம்.

* அழுகை என்பது அழகோடும் தொடர்புடையது என்றால் நம்ப முடிகிறதா? கண்ணீர் கண்களை சுத்தமாக்கும் ஒரு அற்புதம். தவிர, கண்களுக்கு அது நல்ல பயிற்சியும் கூட.

* முகத்துசைகளை ரொம்பவும் சுருக்காமல் அழுபவர்களுக்கு அழுகை என்பது வரப்பிரசாதம். அவர்களது சருமம் மற்றவர்களுடைய சருமத்தைவிடப் பளிச்சென இருக்குமாம்.

* அளவுக்கதிகமாக அழுபவர்கள் கண்ணீரை ஈடுகட்டும் விதத்தில் உடனடியாக நிறையத் தண்ணீர் குடித்தாக வேண்டும்.

## இவரைத் தெரியுமா? பரிசுப்போட்டி இல. 80

### படத்தில் இருப்பவர் யார் தெரியுமா?



தமிழ் சினிமா உலகில் 'புரட்சி' வசனங்களால் மக்கள் மனங்களை ஈர்த்த நாயகரான இவரை உங்களுக்குத் தெரிந்தால் உங்கள் வீடைகளை எழுதி எதிர்வரும் 05 ஆம் திகதிகது முன்னா கிடைக்ககக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.

நீங்கள அனுப்ப வேண்டிய முகவரி:-

**இவரைத் தெரியுமா?**
**போட்டி இல:- 80**
**வலம்புரி – சங்குநாதம்**
**இல-03, 02ஆம் ஒழுங்கை,**
**பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

குறிப்பு:-
சரியான விடை எழுதுபவர்களில் மூன்று போட்டியாளாகளுக்கு குலுககல முறைமூலம் தெரிவுசெய்யபபடடு பரிசு வழங்கப்படும்.

பரிசுபெறும் அதிஷ்டசாலிகள் தமக்கான பரிசுப்பணத்தினை 'வலம்புரி' காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும.

#### இவரைத் தெரியுமா? பரிசுப் போட்டி இல:-80

படத்தில் உள்ளவரின் பெயர் :-........................

அனுப்புபவரின் முழுப்பெயர் :-........................

அனுப்புபவரின் முகவரி :-........................
........................
........................

#### இவரைத் தெரியுமா? பரிசுப் போட்டி இல:- 78
சரியான விடை




நடிகை பிரியாமணி

**இவரைத் தெரியுமா பரிசுப்போட்டி இல. 78இல் பங்குபற்றிப் பரிசுபெறும் அதிஷ்டசாலிகளின் பெயர் விபரம்**

| | | |
|---|---|---|
| **முதற் பரிசு** | :- | அ.லோஜி<br>துன்னாலை வடக்கு,<br>கரவெட்டி. |
| **இரண்டாம் பரிசு** | :- | தி.லலிதா<br>பிறவுண் வீதி,<br>யாழ்ப்பாணம். |
| **மூன்றாம் பரிசு** | :- | க.கபிலன்<br>நீர்வேலி வடக்கு,<br>நீர்வேலி. |

**சரியான விடை எழுதிப் பாராட்டுப் பெறுவோர் பெயர் விபரம்:**

வே.குமாரசுவாமி, கரவெட்டி. M.பிறேமினி, மானிப்பாய். செ.பிறேம்நாத், தலையாழி. த.அரவிந்தன், கோண்டாவில். இ.பிரியதர்சினி, திருநெல்வேலி. T.S.சயந்தன், வட்டுக்கோட்டை. ம.தனுராஜ், அரியாலை. சி.பிரதீபா, குப்பிளான் தெற்கு. சி.ஜெயருக்ஷன், சுன்னாகம். ம.ரமணன், நீர்வேலி.

## சிறந்த பல் டாக்டர்களான சிம்பன்ஸிகள்




சிம்பன்ஸிகள் தலைசிறந்த பல் டாக்டர்களாகச் செயல்படுகின்றன. ஒரு உராங்குட்டனை வைத்து ஆராய்ச்சி பண்ணினார்கள். அதன் செயல்கள் மிகவும் ஆச்சரியமாக இருந்தன. ஒருமுறை ஈரக் களிமண்ணை எடுத்துப் பல் இடுக்கில் வைத்துக்கொண்டது. என்னவென்று பார்த்தால் அதன் ஈரல் பகுதி வீங்கி இருந்தது. மறுமுறை அழுகிய சொத்தைப் பல்லை தானே பிடுங்கிக் கொண்டது.

தங்கள் குட்டிகளுக்குப் பல் பிரச்சினைகள் வந்தால் தாங்களே பல் டாக்டர் வேலையைச் செய்து விடுகின்றன. குரங்கு கூட்டத்தில் ஒரு பல் டாக்டர் குரங்கு இருக்கிறது. அது நோயாளி குரங்குகளை படுக்க வைத்து குச்சிகள் மூலம் பற்களைச் சுத்தம் செய்கிறது. அத்துடன் பல் சொத்தைகளுக்கு மூலிகை இலைகளைப் பறித்து வைத்து வைத்தியம் செய்கிறது.

## வாயுக்கோளாறை கட்டுப்படுத்த ...

வாயுக்கோளாறு பல்வேறு தொந்தரவுகளை ஏற்படுத்தி விடக்கூடும். வாயுக்கோளாறு பல்வேறு காரணங்களினால் ஏற்படலாம்.

மனதில் அடக்கி வைக்கப்படும் உணர்ச்சிகள், இறைச்சி உணவுகள் மற்றும் மாப் பண்டங்களை அதிகளவில் சேர்த்துக் கொள்வது, ஒவ்வாத சில வகை உணவுகள் போன்ற பல காரணங்களால்



வாயுத் தொந்தரவு ஏற்படுகிறது என்று டாக்டர்கள் கூறுகின்றனர்.

வாயுக்கோளாறைப் போக்க நமது அன்றாட உணவில் காய்கள் - கனிகள் மற்றும் கீரை வகைகளை அதிகளவில் இடம்பெறுமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். அதே நேரத்தில் அதிக காரம் நிறைந்த உணவுகள், கிழங்குகள் போன்றவை உணவில் இடம்பெறக் கூடாது.


இஞ்சிச்சாறு, எலுமிச்சம் பழச்சாறு இரண்டையும் சம அளவு எடுத்து அதனுடன் சீரகத்தைக் கலந்து ஒருநாள் ஊற வைத்து ஒரு நாளைக்கு 3 வேளை அருந்துவதன் மூலம் வாயுக் கோளறைக் கட்டுப்படுத்த முடியும் என்றும் கூறுகின்றனர்.

## உலகம் சுற்றிய குழந்தை

50 கிலோ மீற்றர் முதல் 100 கிலோ மீற்றர் தூரம் பயணம் செய்து வந்தாலே அதற்கு மேல் எங்கும் செல்ல மனம் விருப்பப்படாமல் அப்பாடா... என்று மனம் ஓய்வு எடுத்துக் கொள்ளவே விரும்புகிறது. ஆனால் அவற்றையெல்லாம் புறந்தள்ளிவிட்டு ஒரு சிறு குழந்தை ஏகப்பட்ட கிலோமீற்றர் தூரம் வரை பயணம் செய்த ஆச்சரிய சம்பவம் கின்னஸில் இடம்பிடித்துள்ளது.

இத்தாலி நாட்டைச் சேர்ந்தவர்கள் ஜியோ – ரோஸிபார்பியரி தம்பதிகள். இவர்கள் உலகத்தில் உள்ள 7 கண்டங்களுக்கும் பயணம் செய்து சாதனைபடைத்தனர். இந்தச் சாதனையினிடையே அத்தம்பதிகளின் மகன் ஜியோரிஸியோ பார்பயரியும் உடன் சென்றிருந்தான். அப்போது அந்தக் குழந்தை பிறந்து ஒரு வருடமும் 303 நாட்களுமே ஆகியிருந்தது. இவ்வளவு சிறிய வயதில் 7 கண்டங்களைப் பயணம் செய்த முதல் குழந்தை என்ற சாதனையைத் தனது பெற்றோரின் உதவியால் பெற முடிந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## குறுக்கெழுத்துப் போட்டி இல-84



*அனுப்பவேண்டிய முகவரி:*

**குறுக்கெழுத்துப் போட்டி இல - 84**
**'வலம்புரி – சங்குநாதம்'**
**இல-03, 2ஆம் ஒழுங்கை,**
**பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

*முழுப்பெயர்* :- ........................
*முகவரி* :- ........................
........................
........................

*இங்கே வெட்டுக* ------------------------ ✂

*மேலுள்ள கூப்பனில் விடைகளை நிரப்பி எதிர்வரும் 05ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.*

### இடமிருந்து வலம்

(1)பிரச்சினைகளைத் தீர்க்கும் வழி முறைகளிலொன்று. (4)விளையாடடுத்திடல். (6)நிழல் தரும் விருட்சங்களிலொன்று. (7)இவர்களுக்கு ஆதரவு வழங்க வேண்டும். (8)சிறுவர்களுக்குப் பிடித்தமான விளையாட்டுப் பொருள். பெரியவர்களும் விளையாடுவார்கள். (10)விரைவு - இதனைக் குறிக்கும்.

### மேலிருந்து கீழ்

(1)இதனை ஒழித்து புத்திசாலியாக வாழவேண்டும். (2)இது உள்ள மலர்கள் கவரும் தன்மையுடையன. (3)பெண்கள் இக்கலையைக கற்றுக்கொள்வர். (5)இது பெருமையடைவதில் யாவருக்கும் பங்குண்டு. (6)சந்தோசம் இதனைக் குறிக்கும். (9)தந்திரமுள்ள மிருகம்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல - 82 இன் விடைகள்**

### இடமிருந்து வலம்

1.காற்சிலம்பு 3.சேய் 4.கலப்பை 5.மாண்பு 8.மாசி 10.தோத்திரம்

### மேலிருந்து கீழ்

1.காடுகள் 2.சிவப்பு 6.ஊசி 7.வெண்ணெய் 8.மான் 9.பதி

### பரிசுபெற்றோர் பெயர் விபரம்

| | | |
|---|---|---|
| **முதற் பரிசு** | :- | மா.அருந்ததி<br>ஓடக்கரை,<br>பருத்தித்துறை. |
| **இரண்டாம் பரிசு** | :- | சொ.சௌத்ரி<br>திருநெல்வேலி கிழக்கு,<br>திருநெல்வேலி. |
| **மூன்றாம் பரிசு** | :- | வ.மன்னர் அன்ரனி<br>26,சென்ற் யேம்ஸ் கிழக்கு வீதி,<br>குருநகர்,<br>யாழ்ப்பாணம். |

**போட்டியில் கலந்துகொண்டு பாராட்டுப்பெறுவோரின் பெயர் விபரம்:**

திருமதி.S.பாக்கியநாதன், சங்கானை. ஏ.கபீர்த்தன், அரியாலை. ம.ரமணன், நீர்வேலி. வே.குமாரசுவாமி, கரவெட்டி. சங்கீதா+சம்பூரணி, வட்டுக்கோட்டை. ப.சிவசூரியர், சங்கானை. L.சுலக்சனா, யாழ்ப்பாணம்.

## டேபிள் டென்னிசில் சாதனை



மாநில அளவு மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் இடம் பிடித்து விளையாடுவது என்பது பலருக்கும் குதிரைக் கொம்பாக இருக்கும் வேளையில் ஒரு வீராங்கனை ஒலிம்பிக் போட்டியில் இடம் பிடித்து 4 தங்கப்பதக்கங்களை பெற்று உலக சாதனைப் புத்தகமான கின்னஸில் முத்திரை பதித் திருக்கிறார்.

அந்த வீராங்கனையின் பெயர் டெங்க் யாபிங். சீனாவைச் சேர்ந்தவர். 1992 ஆம் ஆண்டு முதல் 1996ஆம் ஆண்டு வரையிலான பெண்கள் ஒற்றையர் டேபிள் டென்னிஸ் போட்டி மற்றும் அதே ஆண்டுக்கான இரட்டையர் டேபிள் டென்னிஸ் ஆட்டத்திலும் சேர்த்து மொத்தம் 4 தங்கப் பதக்கங்களைப் பெற்றுள்ளார். இரட்டையர் ஆட்டப் போட்டியில் பாத் மற்றும் ஹியாயோ ஹங்க் ஆகியோருடன் சேர்ந்து விளையாடினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# நடிகர் திலகம்

## செவாலியே டாக்டர் சிவாஜி கணேசன் அவர்களின்

## மீள்பார்வை

## சுயசரிதை

4



சிவாஜியின் தாத்தா
சின்னச்சாமி காளிங்கராயர்

### முன்னுரை

டி.எஸ்.என்:-அன்புள்ள டாக்டர் சிவாஜிகணேசன் அவர்களே... உங்கள் சுயசரிதையைத் தொகுத்து வழங்க எனக்கொரு வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி. இந்த சுயசரிதைக் 'கேள்வி-பதில்' வடிவில் ஆரம்பிக்கும் முன்பு இதற்கு ஒரு முன்னுரையாக தாங்கள் என்ன கூறவிரும்புகிறீர்கள்?

சிவாஜி:-வணக்கம், டாக்டர் நாராயண ஸ்வாமி அவர்களே! என்னுடைய வாழ்க்கை ஒரு திறந்த புத்தகம். அனைத்து மக்கள் மனதிலும் நிரந்தரமாக ஒரு நடிகனாக இருப்பவன் நான். எல்லோருக்கும் என்னைப்பற்றி நன்றாகத் தெரியும். நான் சிறு வயது முதற்கொண்டே நடிக்க ஆரம்பித்தேன். சினிமா உலகத்தில் நான் நடிக்க ஆரம்பித்த பிறகு என்னைப் பற்றிய குறிப்புகள் பல, புத்தகங்கள் வாயிலாகவும், பத்திரிகை வாயி லாகவும், சிறப்பு மலர்கள் மூலமாகவும், செய்திகளாகவும், விமர்சனங்களாகவும் பல் வேறு கால கட்டங்களில் வெளிவந்திருக்கின்றன. அவற்றில் சிலவற்றில் என்னைப்பற்றி உயர்த்தி சொல்லப்பட்டிருக்கலாம். சிலவற்றில் குறைத்துச் சொல்லப்பட்டிருக்கலாம். ஒரு சிலவற்றில் நிறைவானதாகக் குறிப்பிடப்பட்டிருக்கலாம். வேறு சிலவற்றில் சொல்லப்பட்டவை பொருத்தமற்றதாகக் கூட இருக்கலாம். ஏன் ஒரு சில செய்திகள், உண்மைக்குப் புறம்பானதாகக் கூட இருக்கலாம். இவற்றிற்கெல்லாம் அந்தக் காலத்தில் அந்த சமயத்தில் பதில் சொல்ல எனக்கு நேரமும் காலமும் கிடையாது. அதற்கெல்லாம் தற்பொழுது பதில் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தமும் எனக்கு இல்லை. இருந்தாலும் எனது வாழ்க்கையும் உண்மைச் சம்பவங்களை உங்களிடம் சொல்கிறேன். அதன் மூலம், சரியான விஷயத்தை மக்கள் தெரிந்து கொள்ளட்டும்.



தந்தை-சின்னைய்யா மன்றாயர்
தாயார்-ராஜாமணி அம்மாள்

### பூர்வீகமும்-பிறப்பும்

டி.எஸ்.என்: முதன் முதலாக உங்கள் பூர்விகத்தைப் பற்றித் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறோம். உங்களுடைய பெற்றோர்கள் அவர்களுடைய முன்னோர்கள் நீங்கள் பிறந்த ஊர் போன்ற விஷயங்களைப் பற்றி கூறுங்கள் .

சிவாஜி: எனது ஊர் தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள மிகச் செழிப்பான ஊரான வேட்டைத்திடல். அங்குதான் எனது தகப்பனாரின் குடும்பம் இருந்தது. நான் முதல் முதலில் பேசப்போவது எனது தாயாரைச் சார்ந்த பக்கம் தான். நான் என் தாயாரோடு வளர்ந்ததினால் எனது தாயார் குடும்பம் பற்றித் தான் எனக்கு மிக நன்றாகத் தெரியும்.

எனது தாயார் பெயர் ராஜாமணி அம்மாள். எனது தாயாரின் தகப்பனார் பெயர் சின்னச்சாமி காலிங்கராஜர். அவர் இந்திய ரயில்வேயில் ஆபீஸராக (INDIAN RAILWAY OFFICER) உயர்ந்த பதவிவகித்தவர். அன்றைய திருச்சி, மதுரை, லயின் எல்லாம் அவரது தலைமையில்தான் போடப்பட்டது என்று நினைக்கி றேன். என் தாயார் என் தாத்தாவுக்கு பதினொ ராவது குழந்தை. அன்றைய கால கட்டத்தில் தான் அதிக குழந்தைகள் பெற்றுக்கொள்ளலாமே. இப்போது தான் கஷ்டம்இரண்டோடு நிறுத்திக்கொள்ள வேண்டும். இரண்டு கூட இப்போது ஒன் றாக ஆகிவிட்டது. எனது தாத்தா, என்னுடைய தாயாரை எப்போதும் தன் வீட்டிலே வைத்திருக்க விரும்பினார். அதனால் ஒரு நல்ல மாப்பிள்ளை பார்த்து கல்யாணம் செய்து வைத்து வீட்டோடு வைத்துக்கொள்ளவேண்டும் என்றும் நினைத்தார். எனது தகப்பனார் அதிகம் படிக்காதவர். கிராமத்தில் உள்ள ஒரு மிராசுதார். எனது அம்மாவை அவருக்கு கல்யாணம் செய்துகொடுத்து வீட்டோடு வைத்துக்கொண்டார் என் தாத்தா.

எனது தகப்பனார் சின்னையா மன்றாயர் அவருடைய குடும்பம் பெரியது. பெரிய குடும்பம் என்றால் ஒவ்வொருவருக்கும் 40 வேலி நிலம் இருக்கும் என்று வைத்துக்கொள்ளுங் களேன். எங்களது தாத்தாவினுடைய ஹெட்குவார்டர்ஸ் விழுப்புரத்தில் இருந்தது. சென் னையில் இருந்து 150 கிலோமீற்றர் தூரம் இருக்கும் என்று நினைக்கிறேன். அங்கே என் தாயார் பிரசவத்திற்காக வந்திருந்தார். அப்பொழுது எனது தகப்பனார் ரயில்வேயில் தான் வேலை செய்துகொண்டிருந்தார். எங்களது தாத்தாதான் சேர்த்துவிட்டார். அந்த ரயில்வே ஒர்க்ஷாப் இப்பொழுது திருச்சியில் உள்ளது. அப்பொழுது அது நாகப்பட்டினத்தில் இருந்தது. நாகப்பட்டினம் ஒர்க்ஷாப்பில் என் தகப்பனார் வேலை செய்துகொண்டிருக்கும் காலத்தில் நான் என் தாயார் கர்ப்பத்தில் இருந்தேன். என் தாயாரைப் பார்ப்பதற்காக எனது தந்தை வந்து கொண்டிருந்தார்.வருகிற வழியில் நெல்லிக்குப்பத்தில் என் தகப்பனாரு டைய நண்பர்கள் எல்லாம் இருந்தார்கள் . அவர்கள் எல்லோரும் என் தகப்பனாருடைய ரயில்வேயில் வேலை பார்ப்பவர்கள். அவர்களைப் பார்க்க அவர் ரயில்வே ஆபீசுக்குச் சென்றார். அந்த நேரத்தில் மகாத்மாகாந்தியின் தலைமையில் சுதந்திரப் போராட்டம் மும் முரமாக நடந்துகொண்டிருந்தது. காந்திஜி அகிம்சையில் நம்பிக்கை கொண்டவர். ஆனால் அந்த அகிம்சைக் கொள்கைகளுக்கு கட்டுப்படாமல் 'புரட்சிகரமாக செயல்படமுடியும்' என்று நினைத்தார்கள்.அதில் எனது தகப்பனாரும் ஒருவர். அவருடைய நண்பர்கள் எல்லாம் அதில் இருந்தார்கள். அதனால் அவர்களைப் பார்ப்பதற்காக நெல்லிக்குப்பத்திற்கு எனது தகப்பனார் சென்றிருக்கிறார். அப்பொழுது பிரிட்டிஷ் ரயிலுக்கு டைனமைட் வைத்து உடைக்க வேண்டும் என்பது திட்டம். அதை யார் செய்வது? என்று திருவுலச்சீட்டுப் போட்டார்கள்.

(தொடரும்)

## ஜெயலலிதா– மஹிந்த சந்திப்பு இடம்பெறாது

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கும் இந்திய முதலமைச்சா ஜெயலலிதா ஜெயராமிற்கும் இடையில் இன்று நடைபெறவிருந்த சந்திப்பு இடம்பெறாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய முதலமைச்சரின் கால அட்டவணையின் மாற்றம் காரணமாக இந்த சந்திப்பு இடம் பெறவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.இது தொடர்பாக புதுடில்லியில் கடந்த புதன்கிழமை செய்தியாளர்களிடம் இந்திய வெளிவிவகார அமைச்சக செய்தித் தொடர்பாளர் கூறுகையில்,

இலங்கை ஜனாதிபதியின் தமிழ்நாட்டு சுற்றுப்பயணம் உத்தேசமாகவே திட்டமிடப்பட்டிருந்தது. இரு தலைவர்களுக்கும் நேரம் இருந்தால் சந்திப்பை உறுதி செய்வதாக இருந்தது. ஆனால் தமிழக முதல்வர் சென்னையில் இல்லாததாலும் அதிபருக்கு ஏற்கெனவே பல நிகழ்ச்சிகள இருப்பதாலும் அவரது சந்திப்பில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். (த-2)

## போலி முகவர் நிலையம் தொடர்பில் விசாரணை

(கொழும்பு)

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பெற்றுத்தருவதாகக் கூறி நிதி மோசடி செய்து வரும் முகவர் நிலையம் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் இரகசியப் பொலிஸாரின் உதவியை நாடியுள்ளது.

ஏற்கனவே வெளிநாட்டுக்குச் சென்று நாடு திரும்பிய ஒரு குழுவினரே இந்த மோசடியில் ஈடுபட்டுவருவதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர் தெரிவித்தார்.

சீட்டிழுப்பு முறையொன்றை இந்தக் குழுவினர் கையாண்டு வருவதாக தகவல்கள் கிடைத்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நபர்கள் தொடர்பாக பணியகத்தின் விசாரணைப் பிரிவினரும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-7)

## போதைப் பொருள் கடத்திய 6 பொலிஸார் கைது

(கொழும்பு)

போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்ட 6 பொலிஸ் அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.


இவர்களில் மூவர் பொலிஸ் ஆய்வாளர்கள். ஒருவர் துணை ஆய்வாளர். இருவர் இளநிலை அதிகாரிகள் ஆவர்.

சடடவிரோத போதைப் பொருள கடததல் குழுவுடன் இந்த 6 அதிகாரிகளும் தொடர்பு கொண்டிருந்ததாகவும் அதற்கான ஆவணங்கள் உள்ளதாகவும் கொழும்பு பிரிவு பொலிஸ் மா அதிபர் புஜித ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

மேலும் பல பொலிஸ் அதிகாரிகள் போதைப் பொருள் கடத்தல் குழுவினருடன் தொடர்பு வைத்துள்ளதால் அவர்களும் விரைவில் கைது செய்யப்படுவார்கள் என்றும் புஜித ஜயசுந்தர தெரிவித்தார்.

போதைப் பொருள் கடத்தல் தொடர்பாக சல்பிகா என்ற பெண்ணை கைதுசெய்து விசாரணை நடத்தியதில் முன்னாள் பொலிஸ் ஆய்வாளர் ஒருவர் இலஞ்ச மோசடியில் ஈடுபட்டு வந்துள்ளதும் தெரியவந்துள்ளது. அந்த அதிகாரியின் மனைவியும் பொலிஸ ஆய்வாளராகப் பணிபுரிவதாகவும தெரியவந்துள்ளது. (த)









யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த அரச மற்றும் தனியார் வங்கிகளின் ஊழியர்களால் கடந்த 15ஆம் திகதி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் யாழ். மண்டபத்தில் நடைபெற்ற வருடாந்த நிகழ்வான ஓய்வுபெற்ற வங்கியாளர் கௌரவிப்பு நிகழ்வில் பங்குகொண்ட பிரமுகர்கள் ( இடமிருந்து வலம்) ந.சிவரத்தினம் (சிரேஷ்ட முகாமையாளர் இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்) கே.கனகசிங்கம் (முகாமையாளர், செலான் வங்கி யாழ்ப்பாணம்) T. ரகு (பிரதேச முகாமையாளர் மக்கள் வங்கி யாழ்ப்பாணம்) எஸ்.மோகனதாஸ் (பிரதம விருந்தினர் துணை வேந்தர் யாழ். பல்கலைக்கழகம்) ஆர். சுந்தரலிங்கம் (வங்கி ஓய்வூதியர் சங்கத் தலைவர்) எஸ்.இரவீந்திரா (முகாமையாளர் யாழ். வர்த்தக வங்கி) ஆகியோரை முதலாவது படத்திலும், இலங்கை பிரமகுமாரிகள் இராஜயோக நிலையத்தின் தலைவர் சகோதரர் ஜெகதீசன் தியானப் பயிற்சிப் பட்டறை நிகழ்த்துவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# அவுஸ்திரேலியா வெற்றியின் விளிம்பில தெ.ஆ. 6 விக்கெட் இழப்பிற்கு 99 ஓட்டம்

அவுஸ்திரேலியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி விளையாடும் இரண்டாவது டெஸ்ட் போட்டி அவுஸ்திரேலிய மெல்பேர்ன் நகரில் நடைபெற்று வருகின்றது.

இதில் நேற்றுமுன்தினம் தனது இரண்டாவது இன்னிங்ஸில் 2 விக்கெட் இழப்பிற்கு 110 ஓட்டங்களைப் பெற்றிருந்த





அவுஸ்திரேலியா நேற்றைய நான்காம் நாள ஆட்டத்தில் ஹைடன் மற்றும் சைமன்ட்ஸின் சிறப்பான ஆட்டத்தால் 7 விக்கெட் இழப்பிற்கு 321 ஓட்டங்களைப் பெற்று தனது இரண்டாவது இன்னிங்ஸை நிறுத்தியது.

அவுஸ்திரேலியா சார்பாக துடுப்பாட்டத்தில் ஹைடன் 137 ஓட்டங்களையும் சைமன்ட்ஸ் 54 பந்துகளில் 72 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்கா சார்பாக கலிஸ் 3 விக்கெடடுக்களையும், நெல் கலிஸ் 2 விக்கெட்டுக்களையும் மற்றும் பொலக், சிமத் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். தொடர்ந்து 366 ஓட்டங்களைப் பெற்றால வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடி வரும் தென்னாபிரிக்க அணி நான காம் நாள் ஆட்ட நேரடி முடிவில் 6 விக கெட்டுக்களை இழந்து 99 ஓட்டங்களைப் பெற்று துடுப்பெடுத்தாடி வருகின்றது.

இதில் சிமித் 25 ஓட்டங்களையும் ஆட்ட மிழக்காமல் பிறின்ஸ் 16, பொலக் 13 ஓட்டங்களுடன் துடுப்பெடுத்தாடி வருகின்றனர்.

பந்துவீச்சில் அவுஸ்திரேலியா சார்பாக 2 விக்கெட்டுக்களையும் மெக்ராத் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார். ஐந்தாம் நாளான



இன்று வெல்லப் போவது யார் என்று பொறுத்திருந்து பார்ப்போம். (த-39)

# கங்குலியை அணியில் சேர்த்தது தவறு

## வக்கார் யூனிஸ் தெரிவிப்பு



இந்திய அணியில் மீண்டும் கங்குலியைச் சேர்த்தது சரியான முடிவு கிடையாது என்று பாகிஸ்தான் முன்னாள் கிரிக்கெட் தலைவர் வக்கார் யூனிஸ் கருத்துத தெரிவித்துள்ளார்.

படிஜ க்கு அளித்த சிறப்புப் பேட்டியில இது தொடர்பில் வக்கார் மேலும் கூறிய தாவது,

புதுடில்லியில் இலங்கைக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் கங்குலியின் துடுப்பாட்டத்தைக் கவனித்தேன். பந்தை எதிர்கொள்ள அவர் போராடுவதைக் கண்கூடாகக் கண்டேன்.


ஒரு வீரருக்கு உரிய முழு தகுதியுடன் அவர் இல்லை. இது போன்ற நிலையில் உள்ள வீரர்களைக் கூட அணிக்குத் தேர்வு செய்ய முடியுமா என்று நான் யோசிக்கிறேன். ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது ஓட்டங்களைக் குவிக்கக்கூடிய திறமை கங்குலிக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

இந்திய அணி தேர்வாளர்களுக்கு ஆஸி.யைப் போன்று தொலைநோக்குப் பார்வையில்லை.

முகமட் கை.:.ப் போன்ற வீரர்களின் திறமை வெளிப்பட அவர்களை நல்ல முறையில் பயன்படுத்திக கொள்ளவேண்டும்.

சச்சின் பாகிஸ்தானுக்கு ஆட வருவதில மகிழ்ச்சி கொள்கிறேன் எனத் தெரிவித்தார்.

சச்சினும் நானும் ஒரே நேரத்தில்தான் டெஸ்ட் போட்டிக்கு வந்தோம். நான் கடந்த ஆண்டு ஓய்வுபெற்றுவிட்டேன். ஆனால் சச்சின இன்னும் சாதுரியத்துடன் ஆடிக்கொண்டிருக்கிறார். சச்சினுடன் போட்டியில் பங்கேறற நாட்களைப் பெருமையாக நினைத்துப் பார்க்கிறேன்.



பாகிஸ்தான் அணியிலும் பல குறைபாடுகள் உண்டு. துடுப்பாட்டத்தில் இன்சமாம் - உல் - ஹக், பந்துவீச்சுக்குத் தலைவர் சொயைப் அக்தர் என இவ்விருவரை மட்டுமே நம்பியுள்ளனர். இந்திய வீரர் இர்.:பான் பதான் வெகுவாக முன்னேறியிருக்கிறார் என்றாலும் பாகிஸ்தான் அணிக்கு அச்சுறுத்தலாக இருக்கமாட்டார் எனத் தெரிவித்தார். (த-39)

## விளையாட்டு செய்திகள்


# கிங் புயலாக வருகிறார்

உலகின் முன்னாள் டெனிஸ் வீராங்கனை மாட்டினா கிங் மனம் மாறி மீண்டும் விளையாடுவதற்குக் களம் இறங்கியுள்ளார்.

மாட்டினா கிங் 3 வருடத்திற்கு முன்பு காலில் ஏற்பட்ட காயம் காரணமாக ஓய்வு பெறுவதாக அறிவித்தார். இப்போது மனம் மாறி மீண்டும் விளையாடப் போவதாகக் கூறி களம் இறங்கியுள்ளார்.

ஜனவரி மாதம் முதலாம் திகதி அவுஸ திரேலியாவில் தொடங்கும் கோல்ட் கோட் டென்னிஸ் போட்டியில் அவர் விளையாட இருககிறார்.

இந்தப் போட்டிக்காக அவர் இப்போதே அவுஸ்திரேலியா வந்து குயின் வேண்ட நகரில் தங்கியுள்ளார். அங்கே தினமும்



டென்னிஸ் கோட் சென்று கடினமான பயிற்சியில் ஈடுபடுகின்றார். இவருடைய வருகை தற்போதைய சம்பியன்களான மரிய ஷரபோவா, செரினா வில்லியம் போன்றவர்களுக்கு நிச்சயம் சவாலாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. (த-39)

# மும்முனைக் கிரிக்கெட் போட்டி

13.01.2006 தொடக்கம் 14.02.2006 வரை அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள மூன்று நாடுகளுக்கிடையிலான மும்முனைக் கிரிக்கெட போட்டி விபரம் வருமாறு,

| திகதி | நாடு | எதிர் | அணி | மைதானம் |
|---|---|---|---|---|
| 13.01.2006 | ஆஸி | எதிர் | இலங்கை | மெல்பேர்ன் |
| 15.01.2006 | தென்னாபிரிக்கா | எதிர் | ஆஸி | பிறிஸ்பேன் |
| 17.01.2006 | இலங்கை | எதிர் | தென்னாபிரிக்கா | பிறிஸ்பேன் |
| 20.01.2006 | தென்னாபிரிக்கா | எதிர் | ஆஸி | மெல்போர்ன் |
| 22.01.2006 | ஆஸி | எதிர் | இலங்கை | சிட்னி |
| 24.01.2006 | இலங்கை | எதிர் | தென்னாபிரிக்கா | அடிலெயிட் |
| 26.01.2006 | ஆஸி | எதிர் | இலங்கை | அடிலெயிட் |
| 29.01.2006 | இலங்கை | எதிர் | ஆஸி | வொகாபேர்த் |
| 31.01.2006 | தென்னாபிரிக்கா | எதிர் | இலங்கை | பேர்த் |
| 03.02.2006 | ஆஸி | எதிர் | தென்னாபிரிக்கா | மெல்பேர்ன் |
| 05.02.2006 | தென்னாபிரிக்கா | எதிர் | ஆஸி | சிட்னி |
| 07.02.2006 | இலங்கை | எதிர் | தென்னாபிரிக்கா | ஹொபாட் |
| 10.02.2006 | முதலாவது இறுதி | | | அடிலெயிட் |
| 12.02.2006 | இரண்டாவது இறுதி | | | சிட்னி |
| 14.02.2006 | மூன்றாவது இறுதி | | *(தேவையானால் மாத்திரம்)* | பிறிஸ்பேன் |

இறுதிப் போட்டியில் தெரிவு செய்யப்பட்ட இரு அணிகள் மூன்று போட்டிகளில் கலந்து கொள்ளும், இரு போட்டிகளில் ஒரு அணி வெல்லுமாயின் மூன்றாவது போட்டி நடைபெறாது. (து)

# இலங்கை மகளிர் கிரிக்கெட் அணியிடம் பாகிஸ்தான் மகளிர் அணி தோல்வி

முதலாவது ஆசியக் கிண்ண மகளிர் ஒருநாள் சர்வதேசக் கிரிக்கெட் போட்டி பாகிஸ்தானில் நேற்றுமுன்தினம் ஆரம்பமானது. இதில் பாகிஸ்தான், இந்தியா,



இலங்கை மகளிர் அணிகள் விளையாடி வருகின்றன.

நேற்றுமுன்தினம பாகிஸ்தான் கராச்சி தேசிய மைதானத்தில் இலங்கை பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான முதலாவது லீக் போட்டி நடைபெற்றது. இதில் நாணயசுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை மகளிர் அணி முதலில் துடுப்பெடுத்தாடி நிர்ணயிக கப்பட்ட 50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 178 ஓட்டங்களைப் பெறறது.

துடுப்பாட்டத்தில் ரி.சில்வா 52 ஓட்டங்களையும் மற்றும் ஐ.கலகேன்ரா 25, எம்.உடவத்த 22 ஓட்டங்களையும் பெற்றனர். உதிரிகளாக 28 ஓட்டங்களை பாகிஸ்தான் மகளிர் அணி வழங்கியது.

பந்துவீச்சில் பாக்கிஸ்தான் மகளிர் அண சார்பாக உறோஜ் மும்தா 3 மற்றும் சபகற் றஷீட் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பாகிஸ்தான் மகளிர் அணி 50 ஓவர்களில் 179 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் தனது இன்னிங்ஸை ஆரம்பித்தது. எனினும் இலங்கை மகளிா அணியின் ட.அல்விஸ்ஸின் சிறப்பான பந்துவீச்சில் 48.2 ஓவர்களில் சகல விக்கெட்டுககளையும் இழந்து 164 ஓட்டங்களைப் பெற்று 14 ஓட்டங்களால் தோல்வியுற்றது.

துடுப்பாட்டத்தில் தஸ்கீன் ஹட்பீர் 42 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் இலங்கை மகளிர் அணி சார்பாக ட.அல்விஸ 4 விக்கெட்டுக்களையும் மற்றும் ஸ்ரீவர்தனே 3 விக்கெட்டுக்களையும கைப்பற்றினர். இந்த வெற்றியுடன் லீக் போட்டியில் இலங்கை அணி 5 புள்ளிகளையும், பாகிஸ்தான் மகளிர் அணி1 புள்ளியையும் பெறறது. (த-39)



பெர்லினில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஜேர்மன் ஃபிகர் ஸ்கேட்டிங் கிண்ணப் போட்டியில் குளிர் நடனம் ஆடும் சுவிட்சர்லாந்து ஜோடி லியோனி கிரெய்ல் - ஆஸ்கர் பீட்டர்.

பிறர் நலத்துக்காக பாடுபடுவதுபோல் நடிக்காதீர்கள். உண்மையிலேயே பிறர் நலத்துக்காகப் பாடுபடுங்கள். பிறர் நலத்துக்குச் செய்யும் தொண்டு பிறவிப்பயன் தரும். - *சுவாமி இராமதாசர்*

# வலம்புரி

## பொதுமக்கள் கொலை சர்வதேச தலையீடுகள் தேவை

யாழ்ப்பாணத்தின் சமகால சூழ்நிலை மிகப் பயங்கரமாக மாறியுள்ளது. எந்நேரமும் மரணம் சம்பவிக்கலாம் என்ற மிகப்பெரும் பயங்கரத்துக்குள் மக்களின் வாழ்வியல் அகப்பட்டு விட்டது.

எங்கு பார்த்தாலும் ஆயுதம் ஏந்திய படையினர். அதற்கு அப்பால் பொதுமக்கள் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழக்கும் பரிதாபம். இப்படியே நிலைமை பயங்கரமாகக் கழிகிறது.

நேற்று முன்தினம் நல்லூர் முத்திரைச் சந்திப் பகுதியில் வைத்து இரண்டு இளைஞர்கள் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். அப்பாவி இளைஞர்கள் இருவரை படையினர் சுட்டது ஏன்? அவர்கள் என்ன தவறு செய்தனர். அவர்கள் தவறு செய்திருந்தால் இருவரையும் கைதுசெய்வதை விடுத்து, படையினர் சுட்டதன் உள்நோக்கம் என்ன?

இதுபோன்ற பல்வேறு கேள்விகள் தமிழ்மக்களிடையே எழுந்துள்ளது. யுத்தநிறுத்த உடன்படிக்கை அமுலில் இருக்கும்வரை இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் விடுதலைப் புலிகள் நடமாடுவதற்கு அனுமதியுண்டு.

எனவே யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகள் நடமாடினால்கூட் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கமுடியாது. இந்நிலையில் இராணுவத்தினர் மறித்தபோது மோட்டார் சைக்கிளை நிறுத்தி சோதனைக்கு ஒத்துழைப்பு வழங்கிய அந்த இரு இளைஞர்களையும் பயணத்தைத் தொடர்வதற்கு அனுமதித்துவிட்டு சுட்டுக்கொல்வதென்பது எவ்வகையில் நியாயமானது?

தமிழர்கள் என்பதால் அவர்களை எந்த இடத்தில் வைத்தும் சுட்டுக்கொல்லமுடியும் என்ற நினைப்பு படைத்தரப்பிடமும், அரசாங்கத்திடமும் இருப்பதையே இது வலியுறுத்துகின்றதல்லவா?

வீதியால் சென்ற இரண்டு இளைஞர்களை எந்தக் கேள்வி நியாயமுமின்றி படையினர் சுட்டுவீழ்த்தியிருக்கின்றனரெனில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அபாயகரமான சூழ் நிலை குறித்து உலக நாடுகள் கவனம் எடுக்காமல் இருப்பது அர்த்தமற்றதாகும்.

தமிழ்மக்களின் வாழ்விடங்களைச் சூழ்ந்து நிற்கும் இராணுவத்தினர் எந்நேரமும் தமது துப்பாக்கிகளுக்கு தமிழ்மக்களை பலியாக்கலாம் என்ற உண்மையை நேற்று முன்தினம் முத்திரைச் சந்தியில் நடந்த சம்பவம் உறுதிசெய்து விட்டது.

எனவே இந்நிலைமையைத் தொடரவிட்டால் படையினரின் துப்பாக்கிப் பிரயோகங்களுக்கு ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழ்மக்கள் பலியாகும் மிகப்பெரும் திகில் யாழ்ப்பாணத்தில் இடம்பெறலாம்.

எனவே இதுவிடயத்தில் யாழ்ப்பாணத்தில் இயங்கும் சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்கள் கவனம் செலுத்துவதும்; அதன் ஊடாக உலக நாடுகள் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுத்து சமாதானப் பேச்சை ஆரம்பிப்பதற்கு வழிசெய்வதும் கட்டாயமாகும்.

# ஜே.வி.பி, ஹெல உறுமய கட்சிகளால் இயல்பு நிலையை உருவாக்க முடியுமா?

## -ஐ.தே.க கேள்வி

(கொழும்பு)

பேச்சுவார்த்தைக்கான நாடு குறித்து பேசுகின்ற ஜே.வி.பி, ஹெல உறுமயவினரால் மக்கள் நிம்மதியாக வாழும் நிலையை உருவாக்க முடியுமா? என்று ஐக்கிய தேசியக் கட்சி கேள்வி எழுப்பியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க இதுதொடர்பில் கருத்துக்கூறுகையில்,

அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் எந்த நாட்டில் பேச்சு நடத்தவேண்டும் என்பதை விட உடனே பேச்சுக்களைத் தொடங்க வேண்டும் என்பதே முக்கியம்.

பேச்சுவார்த்தையை ஐரோப்பிய நாடுகளில் நடத்தாமல் ஆசியநாட்டில் நடத்தவேண்டும் என்று கூறும் ஜாதிக ஹெல உறுமய, ஜே.வி.பியினரால் மக்கள் அச்சமின்றி வாழக்கூடிய சுமுகமான சூழ்நிலையை உருவாக்க முடியுமா?

விடுதலைப் புலிகள் சமாதானப் பாதையை விட்டு விலகிச் சென்றால் மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தையை தொடங்குவது மிகவும் கடினம். மனிதப் படுகொலைகள் மூலமாக வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது.

நவமபர் 17ஆம் திகதி முதல 43 படையினர் உள்ளிட்ட 81 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். தற்போதைய அரசியல் படுகொலைகளுக்கு ஜாதிக ஹெல உறுமய மற்றும் ஜே.வி.பியினர் கண்டனம் தெரிவித்து மௌனம் சாதிக்கின்றனர்.

போர்நிறுத்த ஒப்பந்தம் மூலம்தான் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகக் கூறிவரும் அரசாங்கத்தில் உள்ள கூட்டணிக்கட்சிகள்,போர் நிறுத்த ஒப்பந்தத்தை மாற்றுமாறு அழுத்தம் கொடுக்கவும் அதிகாரம் கொண்டவர்கள்.

போர்நிறுத்த ஒப்பந்தம் மூலம்தான் நாட்டின் பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது என்று முழங்க ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தைக் கவிழ்த்த ஜே.வி.பி, இன்று நடைபெறுகின்ற படுகொலைகள் வெறுமனே கண்டிததுவிட்டு மௌனம் காப்பது ஏன்? இநத நிலையற்ற அரசியல் சூழ்நிலை காரணமாகவே வெளிநாடுகளிலிருந்து பெருந்தொகையான உதவிகள் கிடைக்கவில்லை.

தற்போதைய படுகொலைச் சம்பவங்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சியே பொறுப்பேற்க வேண்டும் என்ற பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகர் கொட்டகதெனிய கூறுவது கேலிக்குரியது.

போர்நிறுத்த ஒப்பந்தத்தின் சரத்துக்களை அவர் அறிந்திருக்கவில்லை என்பதையே இது காட்டுகிறது என்றார். (த)

# எமது சிந்தனைகள் ஒன்றுபட்டால் எதிர்பார்க்கும் இலக்கை அடையலாம்

## கல்வி அமைச்சின் செயலாளர்

(புத்தளம்)

தமிழ்த் தேசிய மொழித்தின நிகழ்வுகளில் சிங்கள மாணவர்கள் கலந்துகொள்வது போன்று சிங்களத் தேசிய மொழித்தின நிகழ்வுகளில் தமிழ் பேசும் தமிழ், முஸ்லிம் மாணவர்களின பங்களிப்பைப் பெற்றுக்கொள்வதன் மூலம் மொழிகளுக்கிடையிலான புரிந்துணர்வை தோற்றுவிக்க முடியும்.

இவ்வாறு கல்வி அமைச்சின் செயலாளர் ஆரியரட்ண ஹேவகே தெரிவித்தார்.

கல்வ அமைச்சின் தமிழ் மொழிப் பிரிவு அகில இலங்கை ரீதியில் நடத்திய தமிழ் மொழித்தினப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் வைபவம் கடந்த புதன்கிழமை பம்பலப்பிட்டி புதிய கதிரேசன மண்டபத்தில் நடைபெற்றது.

வடக்கு-கிழக்கு உட்பட நாட்டின் எட்டு மாகாணங்களையும் சேர்ந்த வெற்றியாளர்கள் பரிசில்களைப் பெற சமுகமளித்திருந்தனர்.

• தமிழ்மொழி பிரிவின் பிரதிப்பணிப்பாளரும், போட்டிகளின் பொறுப்பாளருமான சி.சிவநிர்த்தானந்தா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மேலும் அவர் பேசுகையில்,

21ஆம் நூற்றாண்டில் உலக மயமாக்கலுடன் தொடர்புபட்ட அபிவிருத்தியின் பக்கம் செல்லும் இன்றைய காலத்தில், மாணவர் சமூகத்தின் தேவைகள் இனம்காணப்பட்டு அதற்கேற்ப அவர்களை பயிற்றுவிக்க வேண்டும்.

மொழித்தினமானது மனிதநேயத்தை ஒருவருக்கொருவர் பகிர்ந்துகொள்ளக்கூடியதொன்றாகக் காணப்படுகின்றது. மாணவர்கள் உயர்ந்த தரத்தில், ஆசிரியர்களால் பயிற்றுவிக்கப்பட்டுள்ளதைப் பார்க்கும் போது பெரு மகிழ்ச்சியாக இருக்கின்றது.

ஒரேநாடு, ஒரேதேசம், ஒரே இனம் என்ற அடிப்படையில எமது சிந்தனைகள் அமையும் எனில் நாம் எதிர்பார்க்கும் அபிவிருத்திகளை துரிதகதியில் அடைந்துகொள்ளலாம். எமது இலக்கை அடைந்துகொள்ள, பிரிந்து நிற்கின்ற நாம் ஒன்றுபட்டு இச் செயற்பாட்டுக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று அழைப்பு விடுக்கின்றேன் என்றார்.

கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர்களான எம்.ஜி.ரி.நவரட்ண, எஸ்.தில்லைநடராஜா, முன்னாள் பணிப்பாளர் உட்பட பலரும் கலந்துகொண்டனர். (த)



இயற்றாலை வரணியில், வீட்டினுள் புகுந்து நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் இனந்தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப்பட்ட இளைஞனின் சடலம்.

## போர் மூலம் தமிழீழம் உருவானால் சிங்கள தேசத்துடன் போர் தொடரும்

போரின் மூலம் தமிழீழம் கிடைக்குமானால் அது தமிழர்களுக்கான இறுதித்தீர்வாக இருக்க முடியாது. அதன் பின்னர் சிங்கள தேசத்திற்கும் தமிழ் தேசத்திற்கும் இடையிலான தொடர் மோதல்களைக் கட்டுப்படுத்த முடியாது என்று இலணடனில் அமைந்துள்ள தமிழ்ச்சமூக அமைப்புத் தெரிவித்துள்ளது.

அமைப்பின் ஏற்பாட்டாளரான பிள்ளை இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில், இந்தியா இலங்கையுடன் நீண்டகால உறவுகளைக் கொண்டுள்ளது.

இந்த நிலையிலும் அந்த நாட்டுடன் முரண்பட்டுச் செல்வது உகந்ததல்ல. எனவே யுத்தம் ஒன்றிற்கான ஆயத்தங்களை இலங்கையின் இரண்டு தரப்பினரும் விலக்கி சமாதான முன்னெடுப்புக்களை மேற்கொள்ள வேண்டும் என்று பிள்ளை கேட்டுள்ளார். (அ-7)

## தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்



நமக்கு யாரும், எவையும் மகிழ்ச்சி தராமல் போகலகாம். ஆனால் நாமே ஏன் புறக்கணிக்க வேண்டும்? நம்மை நாமே தட்டிக் கொடுத்துக் கொள்ளலாமே! நம் உயர்வு நம் கையில் தான் இருக்கிறது. இருளைப் பழிப்பதை விட ஒளியை ஏற்றுவது சிறந்தது.

சுவாமி விவேகானந்தர்

# இலங்கையின் சமாதான முயற்சிக்கு இந்திய அரசு பூரண ஆதரவு வழங்கும்

## காங்கிரஸ் கட்சித்தலைவர் சோனியா

(புதுடில்லி)

இலங்கையில் சமாதான செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு இந்திய அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்கத் தயாராக உள்ளதாக காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தி தெரிவித்துள்ளார்.

அயல் நாடான இலங்கையுடன் நட்புறவுடன் செயற்படுவதற்கு இந்திய அரசாங்கப் பிரதிநிதிகள் கவனம் செலுத்தியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்தியாவுக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் நடைபெற்ற சந்திப்பின்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இதேவேளை சமாதான செயற்பாடுகளில் அரசியல் தீர்வொன்றைக் காணும் நடவடிக்கைகளில் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நடவடிக்கை எடுக்கவுள்ளதாக இந்திய ஜனாதிபதியுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையை அடுத்து வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

போர்நிறுத்த உடன்படிக்கையை வலுப்படுத்துவதற்கு கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் எனவும் மகிந்தராஜபக்ஷ தெரிவித்துள்ளார். மேலும் இந்திய கடல் எல்லைப் பகுதியில் கைதுசெய்யப்பட்ட இலங்கை மீனவர்களை விடுவித்துக்கொள்ளும் பொருட்டு நடத்தப்பட்ட பேச்சுவார்த்தை வெற்றியளித்துள்ளதாக இந்தியச் செய்திகள் தெரிவித்துள்ளன. அத்துடன் இந்திய வர்த்தக சமூகத்தைச் சந்தித்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்திய முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு கூடுதல் சந்தர்ப்பம் அளிக்கவுள்ளதாக தெரிவித்தார்.

இது குறித்த புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றும் கைச்சாத்திடப்பட்டது. ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷவின் இந்தியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை நேற்றுடன் நிறைவு செய்து கொண்டார். (ச–4)

# பருத்தித்துறை நகரில் இயல்புவாழ்க்கை பாதிப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறையில் தொடர்ந்து பதற்ற நிலை காணப்படுகிறது. கடந்த செவ்வாய்க் கிழமை படையினரின் வாகனம் மீது கிளைமோர்த்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதில் இருந்து இந்நிலை தொடர்வதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மக்கள் வீதிக்குவர அஞ்சுகின்றனர். கடைகள் திறக்கப்படவில்லை. போக்குவரத்துக்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே மேற்கொள்ளப்படுகிறது. சந்தைகள் எவையும் இயங்கவில்லை.

இவ்வாறான நிலையில் அங்கு இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை வடமராட்சி பிரதான வீதிகளில் இராணுவத்தின் ரோந்து நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. (ச–52)

# தாக்குதல் அனைத்தையும்...

மீதான தாக்குதல்களும், யாழ்.குடாநாடு சுடுகாடாக மாறிவிடும் என்ற எச்சரிக்கையும் மக்கள் மத்தியில் பெரும் பீதியை ஏற்படுத்தி உள்ள இந்த வேளையில் சமாதானத்திற்கு ஓர் சந்தர்ப்பம் கொடுங்கள் என்றும் தலைவர்களையும் மக்களையும் நாம் பணிவுடன் கோருகின்றோம்.

ஒரு புறம் தென்பகுதியிலே புதிய ஜனாதிபதியும் அரசும் சமாதான முயற்சிகளை தாம் விரைவில் முன்னெடுக்கப்போவதாக கூற மறுபுறம் தலைவர் பிரபாகரன் அதைத் தாம் வரவேற்பதாக பதிலளித்துள்ள சந்தர்ப்பத்தில் இக்கூற்றுகளுக்கு செயல்வடிவம் கொடுப்பதற்கு இருதரப்பினரும் ஒட்டு மொத்தமாக மக்களும் ஒத்துழைப்பது ஒரு பாரதூரமான பொறுப்பாகும்.

தாக்குதல், பதில்தாக்குதல் என்று சங்கிலித்தொடர்போல் நீண்டுசென்று கொண்டிருக்கும் வன்செயல்கள் இந்தப் பொறுப்பை நிறைவு செய்வதற்கு தடையாகவுள்ளது மட்டுமல்லாது முழுஅளவிலான போர்வெடிப்பதற்கான அபாயத்தை அதிகரித்திருக்கின்றன.

இலங்கைத் தீவை பாரிய அழிவில் இருந்து பாதுகாப்பதற்கு வன்முறைகள் உடனடியாக நிறுத்தப்பட்டு சமாதான முயற்சிகள் துரிதமாக மேற்கொள்ளப்படுவது மிகவும் அவசியமானதாகும். புதிய ஆண்டிலே மக்கள் மன அமைதியுடன் வாழ்வதற்கு அனைவரும் பொறுப்புணர்ச்சியுடன் ஒத்துழைப்போம் என யாழ். ஆயரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

02.01.2006 முதல் வெளிவிடப்படவுள்ள
செய்தி
மாலை நாளிதழ்
நிருபர், வினியோகஸ்தர், தாள் மடிப்போர் தேவை.
இன்று நேரில் வரவும்
SAAMSTECH,
841, Hospital Rd, Jaffna.

NEW SCIENCE HALL
யாழ்ப்பாணம்
ஆரம்பம்
01 01 2006
2008 A/L
கணித, உயிரியல் பிரிவு
ஞாயிறு
காலை 9.00 மணி
எமது வழமையான ஆசிரியர் குழு

# ஹலோ ரஸ்ட் நிறுவனத்தின் வாகனங்கள் உயர் பாதுகாப்பு வலயத்திற்கு மாற்றம்

யாழ்.மாவட்டத்தில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த ஹலோ ரஸ்ட் நிறுவனத்தின் வாகனங்கள் யாவும் பாதுகாப்புக் காரணங்களுக்காக பலாலி உயர் பாதுகாப்பு வலயப்பகுதிக்கு மாற்றப்பட்டுள்ளது.

இது தற்காலிக சூழ்நிலை காரணமாக எடுக்கப்பட்ட ஒரு தற்காலிக நடவடிக்கையே என்றும், அலுவலகம் வழமைபோல் இயங்கும் என்றும் ஹலோ ரஸ்ட் தெரிவித்துள்ளது.

ஹலோ ரஸ்டிற்குச் சொந்தமான வாகனங்கள் இரண்டும் 43 உணர்கருவிகளும் ஹலோவினது சில அங்கத்தவர்களாலும் இந்நிறுவனத்தை விட்டு விலகியவர்களாலும் திருடப்பட்டதன் விளைவாக அரசாங்கம் இம்முடிவை எடுத்துள்ளதாக ஹலோ ரஸ்ட் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருடப்பட்ட கருவிகள் மீட்கப்பட்டவுடன் அத்தோடு பாதுகாப்பு நிலை சீரானவுடன் வாகனங்கள் யாவும் எம்மிடம் ஒப்படைக்கப்படும் என்பதனை அரசாங்கம் உறுதியளித்துள்ளது. ஹலோவின் எல்லா ஊழியர்களுக்கும் மார்கழி மாத ஊதியம் வழங்கப்படும் ஆனால் கடமைகள் நேற்றோடு இடைநிறுத்தப்பட்டுள்ளது என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# வன்முறைகள் தொடருமானால்...

புலிகளுக்குமிடையிலானஉயர் மட்டப் பேச்சுவார்த் தைகளை நடத்தவேண்டிய சூழல் ஏற்படும் எனவும் கண்காணிப்புக்குழுத் தலைவர் தெரிவித்துள்ளார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படுவதற்கு ஸ்திரமான களநிலைவரம் ஒன்று அவசியம். இருப்பினும் சில சக்திகள் சமாதானத்துக்கு எதிராக செயற்படுகின்றன. இவர்களை வைத்துக்கொண்டு சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஒரு போதும் ஆரம்பிக்க முடியாது.

கடந்த 27 ஆம் திகதி யாழ்.குடாநாட்டில் இராணுவத்தினர் மீது நடாத்தப்பட்ட தாக்குதல், யுத்த நிறுத்த உடன்படிக்கை மற்றும் சமாதான செயற்பாடுகளுக்கு எதிரான தாக்குதலாகவே தாம் கருதுவதாகவும் அவர் தெரிவித்தார். இத்தாக்குதலையும் சமூக ,அரசியல்,சமயங்கள் ஆகியவற்றைப்பாதிப்பதாக அமையும் ஏனைய தாக்குதல்களையும் வன்மையாகக் கண்டிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இவ் வன்முறைகள் காரணமாக நடத்தப்படுகின்ற பல்வேறு ஆர்ப்பாட்டங்கள் உடனடியாக முடிவுக்குக் கொண்டுவரப்படவேண்டும். இச்சூழ்நிலைக்கு மத்தியிலும் யாழ்ப்பாணம், மன்னார்,திருகோணமலை,மட்டக்களப்பு ,அம்பாறை ஆகிய மாவட்டங்களில் யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவினர் செயற்பட்டு வருகின்றனர்.

எவ்வாறாயினும் ஆபத்தான இச்சூழ்நிலையில் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் தங்களது பணிகளையாற்றுவதில் சிரமங்கள் தோன்றியுள்ளன. அத்துடன் அவ்வப்போது பணிகளை மேற்கொள்ள முடியாது இருகின்றது. சில சந்தர்ப்பங்களில் அச்சுறுத்தலுக்கும் உள்ளாக்கப்படுகின்றனர் என கண்காணிப்புக் குழுத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான சூழ்நிலைக்கு மத்தியில் முன்னோக்கிச் செல்வதற்கு நேரடிப் பேச்சுவார்த்தை ஒன்று அவசியம் தேவை. இரு தரப்பினரும் உயர் மட்டப் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்குத் தயார் என உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளனர். இதனால் அப் பேச்சுவார்த்தைக்கு ஆக்கபூர்வமான ஒத்துழைப்பினை வழங்க நாங்கள் தயாராகவுள்ளோம். அரசாங்கத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான நேரடிப் பேச்சுவார்த்தை நடத்தப்படுவன் மூலமே இந்நாட்டில் சமாதானம் மலரும் என கண்காணிப்புக் குழுத் தலைவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச–4)

## ஆயர்கள்...

தேசிய கிறிஸ்தவ சபையின் பொதுச் செயலாளர் ஜயசிறி பீரிஸ், மெதடிஸ்த ஆலயங்களின் தலைவர் எபனிசர் ஜோசப், யாழ். மனித அபிவிருத்தி நிலையத்தைச் சேர்ந்த ஜெயக்குமார், மெதடிஸ்த ஆலயங்களின் பிரதான போதகர் கதிர்காமர், யாழ். மாவட்டத்தின் தலைமை தியாக்கோன் எஸ்.பி.நேசகுமார் ஆகியோரும் பங்கேற்கின்றனர்.

இச்சந்திப்பில் தற்போதைய அரசியல் நிலைவரம், அதிகரித்துவரும் வன்முறைகள் மற்றும் சமாதான முன்னெடுப்புக்கள் தொடர்பாக ஆராயப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. (ச)

## நித்திரையிலிருந்த.....

15 நாட்களுக்கு முன்னதாகவே பிரஸ்தாப இளைஞன் வேலையில் இணைந்துகொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை சம்பவ இடத்திற்கு நேற்றுக் காலை சென்ற பருத்தித்துறை நீதிவான் அரியநாயகம் சடலத்தை பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறும் அதன்பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்குமாறும் உத்தரவிட்டார். (ச–39)

## இணுவிலில்....

இதனையடுத்து அப்பகுதியில் உள்ள கடைகளில் பணிபுரிந்தோர் கடைகளை அவ்வாறே விட்டுவிட்டு தப்பியோடினர். ஆட்டோ சாரதிகள் தமது ஆட்டோக்களை விட்டுவிட்டு ஓட்டமெடுத்தனர்.

இதனையடுத்து பதற்றநிலை அங்கு ஏற்பட்டது. மேலதிக படையினர் குவிக்கப்பட்டு இரவிரவாகத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை நல்லூரில் உள்ள இராணுவக் காவலரண் மீது மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் ஒரு இராணுவச் சிப்பாய் படுகாயமடைந்தார்.

இதனையடுத்து அப்பகுதியூடான போக்குவரத்தில் ஈடுபட்டோர் படையினரால் தாக்கப் பட்டனர். (ச–39,122)

## மன்னாரில்....

மன்னார் பஸ் நிலையப் பகுதியில் பயணித்தோர் மீது இராணுவம் கண்மூடித்தனமாக துப்பாக்கியால் சுட்டும் தாக்கியும் உள்ளனர். இதனால் பலர் காயமடைந்துள்ளனர்.

இதேவேளை மன்னாரில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறை மற்றும் நிர்வாக அலுவலகங்கள் ஆகியவற்றையும் இராணுவத்தினர் உடைத்து நாசப்படுத்தியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ச–4)








இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.12.2005 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.